


# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 209 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (11.04.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 19, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50




# ஏப்ரல் இறுதியில் கட்சித் தாவல்கள்!

## அமைச்சரவையில் மாற்றம் வரும் என்கிறார் சன்ன ஜயசுமன



•நமது நிருபர்

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் எம்.பிக்கள் பலர் அரசு பக்கம் வரவுள்ளதால் அமைச்சரவையில் மாற்றம் இடம்பெறுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 20ஆம் திகதிமுதல் 30ஆம் திகதி வரையான காலத்தில் கட்சித் தாவல்களும் அமைச்சரவை மாற்றமும் நிகழலாமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னரான இருவார காலம் நாட்டின் அரசியலில் தீர்க்கமானதாகும்.

ஏனென்றால், எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரையான காலப்பகுதியில் கட்சித் தாவல்கள் இடம்பெறக்கூடிய சூழ்நிலையே காணப்படுகின்றன. நாம் எந்த அணியையும் சார்ந்து பணியாற்றத் தயாரில்லை. ஆளும் கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் நாட்டின் நலன்கருதி எடுக்கும் தீர்மானங்களுக்கு நாம் ஆதரவு வழங்குவோம் - என்றார்.

# அரசாங்கத்தில் இணையும் ஐ.ம.ச. உறுப்பினர்கள்



•கே. சுபானி

புதுவருடத்தின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருசிலர் அரசாங்கத்துடன் இணைவர் - என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா உறுதிப்படுத்தியுள்ளார்.

02 பக்கம்

# தேர்தல் மேலும் காலதாமதமாகும்

## பிரதமர் – ஆணைக்குழு சந்திப்பில் தீர்க்கமான முடிவில்லை

நா. தினுஷா

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்த முடியாது என்பதை அரசாங்கம் உறுதியாக அறிவித்துள்ளதுடன், எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதியின் பின்னர் முக்கிய தீர்மானங்களை எடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக தேர்தல் மேலும் காலதாமதமடையும் நிலை உருவாகியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளிட்ட ஆணைக்குழு...

02 பக்கம்

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பு



•கே. சுபானி

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் நேற்று (10) அறிவித்தது.

இதன்பிரகாரம் பரீட்சையை எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ.அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 பக்கம்

# பொலிஸ் உத்தரவை மீறிய கார் மீது துப்பாக்கிச் சூடு

## பொல்கஹவெலவில் மூவர் கைது

•ம. சசிதரன்

பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த கார் மீது பொல்கஹவெலவில் நேற்று (10) துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொல்கஹவெலவில் குறித்த கார் பயணித்தபோது, பொலிஸார் காரை நிறுத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர். எனினும், சாரதி காரை நிறுத்தாமல் சென்றதால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்து, குறித்த காரில் பயணித்த பெண் உள்ளிட்ட 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சிவலிங்க சிலையுடைப்பு விடயத்தில் தலையிட்டது இந்தியா

## ஆலய நிர்வாகத்தினருடன் உயர்ஸ்தானிகர் பேச்சு

•சி. திவியா

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் உடைத்து தகர்க்கப்பட்ட விவகாரம் தொடர்பில் ஆலயத்தின் நிர்வாக சபையினரிடம் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கேட்டறிந்துள்ளதுடன், உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத்தினருக்கும் இந்திய உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

ஆலயத்தின் வரலாறு தொடர்பிலான ஆவணங்கள் நிர்வாக சபையினரால் இதன்போது உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டதுடன், விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் அரசாங்கத்தின் கவனயீனம் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

விக்கிரகங்களைத் தகர்த்து விஷமத்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டோர் இதுவரை கைதுசெய்யப்படாமை தமிழர்கள் மீதான அடக்குமுறையை வெளிப்படையாகக் காட்டுவதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்த விடயங்களைக் கேட்டறிந்த உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே,...

02 பக்கம்

# ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரம் 24ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு




•சி. திவியா

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைத்து தகர்க்கப்பட்டமை தொடர்பான வழக்கை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக வவுனியா நீதவான் நீதிமன்றம் நேற்று (10) அறிவித்தது.

02 பக்கம்

# போலி நாணயத்தாள் புழக்கத்தில்

## பொலிஸார் எச்சரிக்கை

•கே. சுபானி

பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்கள் அதிகம் புழக்கத்தில் உள்ளதாகவும் அது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ அறிவுறுத்தியுள்ளார்.

புத்தாண்டில் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 பக்கம்

## அமைச்சர் ஜீவனின் கோரிக்கை ஏற்பு

# மலையக பல்கலைக்கழகத்தை அமைக்க ஜனாதிபதி பணிப்பு



மலையக பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (10) நடைபெற்றது.

இதன்போது மலையக பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் விடுத்த கோரிக்கையை ஏற்றே, ஜனாதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையால் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அடுத்தகட்ட நகர்வுகள் ஸ்தம்பித்தன. இந்நிலையில், இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார். இதன்படி விரைவில் பணி ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான வீ.இராதாகிருஷ்ணன், எஸ்.பி.திசாநாயக்க, சீ.பீ.ரத்னாயக்க, மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோரும் ஜனாதிபதி செயலாளர், மாகாண ஆளுநர்,...

02 பக்கம்

## உஷ்



எதிர்க்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தரப்பிலிருக்கும் பலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதால் தேசிய அரசு என்ற ஒன்றை அமைத்து அமைச்சுப் பதவிகளை வழங்கலாம் என்று ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாம்.

தேசிய அரசை அமைக்க ரணில் உடன்பட்டால் மறுபுறம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதற்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக தெரிகிறது. இதற்கு பிரதியுபகாரமாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அரசாங்கத்தில் உயர் பதவி ஒன்றைக் கோருவதாக சொல்லப்படுகிறது.

## கமெண்ட் கந்தர்...

குரங்கிலிருந்து தான் வந்தோம் எண்டதை இந்த கட்சித் தாவல்களே நிரூபிக்குது என்னங்கோ..!



# ரூ.14,000 உதவிக் கொடுப்பனவை பெருந்தோட்ட மக்களுக்கும் வழங்குக!

## ஜனாதிபதி ரணிலிடம் மனோ எம்.பி. நேரடியாக வலியுறுத்து



நாட்டில் குறைந்த வருமானம் பெறும் நலிந்த குடும்பங்களுக்கு அரசாங்கம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள 14 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கும் கட்டாயம் கொடுக்கப்படவேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் குறைந்த வருமானம் பெறும் நலிந்த குடும்பங்களுக்கு மாதாந்தம் 14,000 ரூபாவை வங்கிக் கணக்குகள் மூலம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

02 பக்கம்

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

## ஐ.ம.ச. உறுப்பிணர்கள் முறைப்பாடு



•யாழ். செய்தியாளர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்றுறை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம் உள்ளிட்ட வேட்பாளர்கள் நால்வர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய...

02 பக்கம்




பிரதிகளை முன்கூட்டியே ஒதுக்கிக் கொள்ள, உங்கள் பகுதியிலுள்ள பத்திரிகை விற்பனை முகவரை நாடுங்கள்..

தமிழன்

# நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு நுவரெலியாவின் அதிகபட்ச பங்களிப்பினைப் பெற புதிய வேலைத்திட்டம்

## நகரத்துக்கு நீர் முகாமைத்துவம் மற்றும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் அறிவுரை



நான்கு வருடங்களுக்குள் இந்நாட்டின் ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கான பிரதான சுற்றுலா நகரமாக காணப்படும் நுவரெலியாவின் அதிகபட்ச பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கான திட்டமிடலுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

நுவரெலியா நகர அபிவிருத்தி தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நேற்று (10) நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் நுவரெலியா புதிய நகர அபிவிருத்தி திட்டம் மற்றும் நுவரெலியா சுற்றுலாத் திட்டம் என்பனவும் வெளியிடப்பட்டன.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்று பலர் நினைத்தாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தம் வாயிலாக நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்ற புதிய எதிர்பார்ப்புகள் தோன்றியுள்ளதென சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா மாவட்டத்தை நோக்கி வரும் சுற்றுலாப் பிரயாணிகளை இலக்கு வைத்து வருடம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துக் கொள்வதற்கான கண்கவர் நகரமாக அதனை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் நோக்கத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சுற்றுலாத்துறையின் தேவைப்பாடுகளை அறிந்துகொண்டு புதிய திட்டங்களை வகுக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உயர் கட்டிடங்களுக்கு மாறாக ஓய்வெடுக்கக்கூடிய வகையிலான ரம்மியமான சூழலுடன் அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நுவரெலியா நகரத்துக்குள் மழைநீர் வழிந்தோடுவதற்கு அவசியமான வேலைத்திட்டம் ஒன்று இல்லாமை நீண்டகால பிரச்சினையாக உள்ளதெனவும் அதற்கு தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்திய ஜனாதிபதி, குடிநீர் பிரச்சினைக்கான தீர்வுகளை வழங்குவதற்கான முக்கியமான சில அறிவுரைகளையும் வழங்கினார்.

நுவரெலியா நகரத்திற்கு முறையற்ற விதத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு மாறாக உரிய திட்டமிடலுக்கமைய நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த ஜனாதிபதி, பாரிய கட்டிடங்களை நிர்மாணிப்பதால் நகரம் சீரழிவுக்குள்ளாவதாகவும் நுவரெலியாவாகவே தொடர்ந்தும் தக்கவைப்பதா அல்லது நியூயோர்க் நகரமாக மாற்றியமைப்பதா என்பதை தீர்மானிக்குமாறும் அறிவுறுத்தினார்.

### அரசாங்கத்தில் இணையும்...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது புத்தாண்டுக்குப் பின்னரான கட்சித் தாவல்கள் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சித்தாவல் இடம்பெறவுள்ளதை எங்களால் மறுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்தின் பக்கம் செல்லவுள்ளனர்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்கு வங்கியில்லை. ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே ஐக்கிய தேசியக் கட்சியினர் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் வரும் எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுக்க தயாராகவே இருக்கிறோம். எங்களுக்குள் பிளவுகள் இல்லை. 40 பேர் அல்லது 50 பேர் செல்வார்கள் என சிலர் கூறினர். ஆனால் ஒரு சில உறுப்பினர்கள் போகக்கூடும்.

நூற்றுக்கு நூறுவீதம் எவரும் போகமாட்டார்கள் என நாம் கூறமுடியாது. ஏனெனில், அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்ள பலர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வேட்பாளராக களமிறங்கவுள்ளதாக அமைச்சர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனால் நான் இதை கடவுளின் தண்டனையாகவே பார்க்கிறேன். மொட்டுக்கு வந்த சோதனை - என்றார்.

அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவைப் பற்றி குறிப்பிடுகையில்,

ராஜித எப்போதும் கட்சிதாவும் நோக்கத்துடனேயே உள்ளார். அமைச்சு பொறுப்பை ஏற்பது குறித்தும் ஆர்வமாகவுள்ளார்.

அவர் எப்போதும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் காணப்படுகின்றார். மேலும் கட்சிதாவுவது அவருக்கு பெரிய விடயமல்ல.

தற்போதைய பிரதமர் இன்று (நேற்று) தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சந்தித்துள்ளார். இந்த அரசாங்கம் தனது தோல்வியை மறைக்க திட்டமிட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு பல உத்திகளை கையாண்டதை நாம் அறிவோம். இதன் மற்றொரு கட்டமாகவே பிரதமர் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சந்தித்துள்ளார். நிறைவேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வகுப்புத் தோழனாக இருந்தாலும் இவர் இன்று கோழையாக மாறியுள்ளார்.

தேர்தல் தொடர்பில் இன்று ஒரு தீர்க்கமான முடிவை எதிர்பார்க்கிறோம்.

அரசாங்கம் இன்று மேற்கொண்டு வரும் சர்வாதிகாரப் பயணத்திற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சிறந்த உதாரணமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு இந்த அரசாங்கம் வளைந்து கொடுக்கிறது. ஊழல் ஒழிப்புச் சட்டத்தையே முதலில் கொண்டு வர வேண்டும். சர்வதேச நாணய நிதியமும் ஊழலுக்கு எதிரான சட்டம் தேவை என்று கூறுகிறது. எதிர்க்கட்சியாகிய நாங்களும் ஊழல் ஒழிப்பு சட்டமூலம் தேவை என்கிறோம். குறிப்பாக இச்சட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளையும் விசாரிப்பதற்கான ஏற்பாடுகளை குறித்த சட்டமூலம் கொண்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

எனவே, ஊழல் ஒழிப்புச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்து, கடந்த காலத்தைப் பாதிக்காத வகையில் நடைமுறைப்படுத்தக்கூடிய சட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு விசாரணை ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

உயர்தர வினாத்தாள்களின் மதிப்பீட்டுப் பணிகள் நிறுத்தப்பட்டதை நாம் அறிவோம். இது ஒரு தீவிர சமூகப் பிரச்சினை. இதை நிதானமாகப் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மிக தாமதமான நடவடிக்கைகளையே எடுத்து வருகிறது. நமது நாட்டு பிள்ளைகளின் கல்வியில் மிகவும் அலட்சிய மனப்பான்மையே கல்வியமைச்சு கொண்டுள்ளது.

இந்த விடயத்தை தங்கள் தொழில் உரிமைகளுக்காக பயன்படுத்த வேண்டாம் என்று மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்களையும் கேட்டுக்கொள்கிறோம். கொவிட் தொற்றுநோய் காரணமாக பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளை தொடர முடியாமல் போனது. பிள்ளைகளின் கல்வி சார்ந்து இதை நோக்குங்கள். தொழில்முறை உரிமைகளுக்காகப் போராடுவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலானது.

இது தொடர்பில் விவேகமான முடிவுகளை எடுக்க, குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு அரசாங்கம் இதில் உடனடித் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் கோருகிறோம்.

நெல்லுக்கு சரியான விலை இல்லை. சந்தையில் கடும் சிக்கல்கள் உள்ளன. அரசாங்கம் நிர்ணய விலையில் கொள்முதல் செய்வதாக கூறினாலும் எங்கும் இடம்பெறுவதாக இல்லை. எனவே உடனடியாக தலையிட்டு இரு போகங்களிலும் ஆதரவற்றுப்போயுள்ள விவசாயிகளுக்கு நீதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம். நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும்.

அத்துடன், மொட்டு இன்று இரண்டாக பிளவுபட்டிருப்பதை மிகத் தெளிவாகக் காணக்கூடிய வகையில் இன்று மொட்டு அரசியல் சந்திப்புகளை நடத்தி வருகிறது. சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தலைவராக ஏற்றுக்கொள்கிறார்கள் போலவே மற்றவர்கள் மஹிந்த ராஜபக்ஷவை ஏற்றுக்கொள்வது போலவும் தெரிகிறது.

இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்காளர் தளம் இல்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்காளர் தளம் உள்ளது. எனவே, வரவிருக்கும் எந்தத் தேர்தலுக்கும் நாங்கள் தயார். எங்களுக்குள் எந்தப் பிரிவினையும் இல்லை. ஒன்றிரண்டு பேர் போகலாம். யாரும் நூறு சதவிகிதம் போக மாட்டார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. சிலர் அமைச்சுப் பதவிகளுக்காக காத்திருக்கிறார்கள். அன்றிலிருந்து அலைந்து திரிந்தவர்களுக்கு இது பெரிய பிரச்சினை இல்லை.

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியாக மிக பலமான மாபெரும் பொதுக் கூட்டணியை உருவாக்கும் வகையில் ஐக்கிய கூட்டணியை உருவாக்கி எதிர்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கான விரிவான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்று கூறுகின்றோம். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமை தாங்குகிறார். பல கட்சிகளும் சிவில் அமைப்புகளும் கூடி கலந்துரையாடி வருகின்றனர். எதிர்காலத்திற்கு பொருத்தமான பொருளாதார வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய குழு எம்மிடம் உள்ளது. சிறந்த பொருளாதார வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. அதனை இந்நாட்டு மக்கள் புரிந்துகொண்டு எம்மைச் சுற்றி அணிதிரள்வார்கள் என நான் நம்புகிறேன் என்றார்.

### சிவலிங்க சிலையுடைப்பு...

ஆலய விவகாரம் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும், ஆலய வரலாறு உள்ளிட்ட ஏனைய தகவல்களுடன் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் நிர்வாகத்தினரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் செயலாளர் தொ.தமிழ்ச்செல்வன் ‘தமிழன்’ நாளிதழுக்கு கருத்து வெளியிடுகையில், எமது ஆலயத்தின் விக்கிரகங்கள் அகற்றப்பட்டமை தொடர்பில் நாம் உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தினோம். மேலும் குருந்தூர்மலையில் இடம்பெறும் திட்டமிட்டவகையிலான அழிப்பு தொடர்பிலும் எடுத்துரைத்தோம். ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அவர் எமக்கு உறுதியளித்தார் என்றார்.

இதேவேளை, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவையும் ஆலய நிர்வாகத்தினர் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும்வரை ஆலய விடயத்தில் தலையிட முடியாதென அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

### போலி நாணயத்தாள்...

பொது மக்கள் போலி நாயணத்தாள்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருத்தல் வேண்டும். ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினரால் மேற்படி போலி நாணயத்தாள்கள் புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளன.

அம்பாறை, இங்கினியாகல பகுதியில் 5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் மூவர் நேற்றுமுன்தினம் (09) கைதுசெய்யப்பட்டனர்.

இந்த புத்தாண்டு காலப்பகுதியில் இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினர் இவ்வாறான போலி நாணயத்தாள்களை புலக்கத்தில் விடக்கூடும். பொதுமக்கள் கொடுக்கல் வாங்கலின் போது மிகுந்த விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

போலி நாணயத்தாள்கள் தொடர்பில் அவதானத்துடன் இருந்ததாலேயே பணம் கைமாற்றுகையில் அது போலி நாணயத்தாள் என அறியப்பட்டநிலையில் இங்கினியாகல பகுதியில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பொருட்கொள்வனவுக்காக கூட்ட நெரிசல் மிகுந்த பகுதிக்கு செல்வோர் தம்முடன் அழைத்துச் செல்லும் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

தங்க ஆபரணங்களை அணிந்துகொண்டு கூட்ட நெரிசல் மிகுந்த பகுதிகளுக்குச் செல்லவேண்டாம். அதேபோன்று குழந்தைகளுக்கும் தங்க ஆபரணங்களை அணிவித்து அழைத்துச் செல்ல வேண்டாம். இது திருடர்களுக்கான வாய்ப்பாக அமையக்கூடும். இதன்போது அவர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்கநேரிடும்.

அதேபோன்று, பெண்கள் பணப்பைகள் மற்றும் கைப்பைகளை கவனமாக வைத்துக்கொள்ளவேண்டும். கைப்பைகளை சூட்சுமமான முறையில் அறுத்துச்செல்லும் வழிப்பறிக் கொள்ளையர்கள் அதிகரித்துள்ளனர். இதற்காகவே ஒருங்கமைக்கப்பட்ட குழுவொன்று செயற்பட்டு வருகிறது. இதனால் மக்கள் செறிந்த சந்தைப்பகுதிக்கு செல்லும்போது தமது உடைமைகள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

அத்தோடு, கூட்டநெரிசலான பகுதிக்குச் செல்லும்போது முகக்கவசம் அணிந்து செல்வது மிக நல்லது. உங்களின் சுகாதாரம் தொடர்பில் அக்கறைக் கொள்வது உங்களுக்கு நல்லது.

புத்தாண்டை முன்னிட்டு பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டுள்ள விசேட சந்தைகளில் பொருட்கொள்வனவின்போது அவதானத்துடன் இருத்தல் வேண்டும். காரணம், இச்சந்தைகளில் வஞ்சக தன்மையுள்ள வியாபாரிகள் வரக்கூடும். நுகர்வுக்கு பொருத்தமற்ற, காலாவதியான பொருட்களை பல்வேறு விலைகளில் மக்களை ஏமாற்றி விற்கக்கூடும்.

விலைகொடுத்து வாங்கும்போது பொருட்களின் தன்மை தொடர்பில், அது எவ்வகையானது என்பது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும். குறித்த வியாபாரிகள் தற்காலிகமாக சந்தைகளில் பொருட்களை விற்பனை செய்பவர்கள். அவர்களை தேடுவது கடினம். ஆகையால், தாம் கொள்வனவு செய்யும் பொருட்கள் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருத்தல் வேண்டும் என்றார்.

### ஆதிலிங்கேஸ்வரர்...

இந்த ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணைகள் வவுனியா நீதவான் நீதிமன்றில் நேற்று (10) இடம்பெற்றது.

இதன்போது, விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான விசாரணை அறிக்கையினை பொலிஸார் மன்றில் சமர்ப்பித்ததுடன், இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மன்றுக்கு தெரியப்படுத்தினர்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய நீதிமன்றம், குறித்த வழக்கை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன், இது தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்தது.

### அமைச்சர் ஜீவனின்...

அரச அதிபர், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது ஸ்தம்பித நிலையில் உள்ள அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பது பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நுவரெலியா மாவட்ட சுற்றுலா அபிவிருத்தி, வசந்தகால பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

### க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை...

எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாக விருந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் (2022) மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

இந்நிலையில், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளை எதிர்வரும் மே மாதம் 29ஆம் திகதி முதல் ஜூன் 08ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 0112784208, 011 2784537, 0112785922 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டும், 011 2784422 என்ற தொலைநகல் இலக்கம் மற்றும் gceolexamsl@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியை அணுகுவதனூடாகவும் பெற்றக்கொள்ளமுடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் சுமார் இரண்டு மாத காலம் தாமதமாகியுள்ளதால் மேற்படி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளை ஒத்திவைக்க நேரிட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

### தேர்தல் மேலும் காலதாமதமாகும்...

உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் நேற்று (10) இடம்பெற்றது. இதன்போதே பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தரப்பு இதனை அறிவித்திருக்கிறது.

இதேவேளை, எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் நிதியமைச்சுடன் கலந்துரையாடி தேர்தல் தொடர்பான முக்கிய அறிவிப்பை வெளியிடவும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார். நிதிப் பிரச்சினைகள் தொடர்பில் ஆணைக்குழு பிரதமரிடம் அறிவித்திருந்த போதிலும் அதுதொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக, தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த அரச பணியாளர்களின் சம்பள கொடுப்பனவு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. மார்ச் மாதம் 09ஆம் திகதி முதல் ஏப்ரல் 25ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான அவர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தை செலுத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் 25ஆம் திகதியின் பின்னர் அவர்களுக்கான சம்பள கொடுப்பனவை செலுத்தும் முறை தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இதுதொடர்பான பரிந்துரைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படவுள்ளது.

அந்த பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் வேட்பு மனுதாக்கல் செய்த தேர்தல் தொகுதி மற்றும் பிரதேசத்திலிருந்து வெளியேற்றி வேறு இடங்களில் நியமனங்களை வழங்கி அவர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்த கலந்துரையாடலின்போது தீர்மானித்ததாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் விவகாரத்தில், தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களம் பிரசன்னமாகாத விடயம் குறித்தும் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா கேள்வி எழுப்பியுள்ளார். அதனை தொடர்ந்து இந்தப் பிரச்சினை குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. பிரதமரும் இதுதொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார்.

அதேபோன்று, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலின்போது தேர்தல் ஆணைக்குழுவினால் நிதி தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கு மிக விரைவில் முறையான வேலைத்திட்டங்களை ஏற்படுத்திக்கொடுப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்தன ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அறிவித்திருக்கிறார்.

இந்நிலையில், தேர்தல் ஆணைக்குழுவுடன் அரசாங்கத்துக்கு எவ்வித முரண்பாடுகளும் இல்லை. தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும். அதற்கான சூழலை உருவாக்க வேண்டும். அதுவரையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகுமென இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேர்தலை ஆணைக்குழு எதிர்காலத்தில் நிதி அமைச்சுடன் தனியான பேச்சுவார்த்தையொன்றை முன்னெடுக்கும். அதன் பின்னர் அவர்கள் அறிவிப்பார்கள். தற்போதுள்ள நிலைமையில் எதிர்வரும் 25ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது கடினமான விடயமாகும். இதுவரையில் தபால்மூல வாக்களிப்பும் மேற்கொள்ளவில்லை.

அதற்கமைய, எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பை வெளியிடும்.

தேர்தல் ஆணைக்குழு பல்வேறுபட்ட விடயங்களுக்கு நிதி தேவைப்பாடு இருப்பதாக கோரியிருந்தது. எனவே, அது நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் முன்னெடுக்கவேண்டிய தீர்மானங்களாகும். இதுதொடர்பில் ஜனாதிபதிக்கும் நிதியமைச்சுக்கும் அறிவிக்க பிரதமர் தீர்மானித்தார். அதேபோன்று, நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு ஆணைக்குழுவுக்கும் அறிவித்திருக்கிறோம்.

எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி நீதிமன்ற வழக்கு விசாரணைகளும் இடம்பெறவுள்ளன. எனவே, அதுகுறித்தும் கவனம் செலுத்தியதன் பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதே எனது எதிர்பார்ப்பாகும். அரசாங்க அதிகாரிகளுக்கு அடிப்படைச் சம்பளத்தை வழங்க எதிர்பார்த்துள்ளோம். அந்த கொடுப்பனவு போதாத ஊழியர்களை அவர்களின் தொகுதிக்கு அப்பால் அவர்களின் கடமைகளை மாற்றி, அடுத்த மாதத்திலிருந்து அவர்களுக்கான மொத்த கொடுப்பனவுகளை வழங்கவும் தீர்மானித்திருக்கிறோம் என்றார்.

### மனித உரிமைகள்...

அலுவலகத்தில் நேற்று (10) முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்த பின்னர் முருகவேல் சதாசிவம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

எங்களது அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பாக இன்றையதினம் (நேற்று) நாங்கள் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம்.

இலங்கையிலே ஜனநாயக ஆட்சி நடக்கிறது என சொல்லி வெளிநாடுகளுக்கு பரப்புரையை செய்துகொண்டு இருக்கின்ற ரணில் அரசாங்கம், பாராளுமன்றத்தில் தேர்தலுக்கான நிதியை ஒதுக்கீடு செய்த பின்னர் தேர்தல் திகதியை அறிவிக்குமாறு தேர்தல் திணைக்களத்திற்கு உத்தரவு வழங்கிவிட்டு, தனது கட்சிக்கான ஆதரவு இல்லை என்ற கள நிலவரத்தை அறிந்த பின்னர் வேண்டுமென்றே இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்கிறது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் என்பது இலங்கையின் அரசியலில் மிகவும் முக்கியமான ஒரு தேர்தல். பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் அதற்கு அடித்தளம் வகிப்பது இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தான். எங்களுடைய உரிமையை தேர்தல் திணைக்களம் திட்டமிட்ட வகையில் சிதைத்துள்ளது.

இந்த அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக நாங்கள் முறைப்பாடு செய்வதற்கான காரணம், ஒவ்வொரு தனி மனித சுதந்திரமும் பறிக்கப்பட்டுள்ளமையாலாகும்.

ஜனநாயக நாட்டில் தேர்தல் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. தேர்தல் ஒழுங்காக நடைபெறாவிட்டால் அந்த நாட்டில் ஜனநாயகம் இல்லை என்பது தான் அறிகுறி.

இந்த நாட்டு மக்களை பிழையான வழியில் திசைத்திருப்பி, அவர்களுக்கு இங்கு பஞ்சம் இருப்பதை அடையாளம் காட்டிக்கொண்டு தேர்தலை நடத்தாமல் இருப்பது ஒவ்வொரு மனிதனது அடிப்படை உரிமையையும் பறிக்கும் ஒரு செயலாகும். எனவே நான் கேட்டுக்கொள்வது யாதெனில், மக்களே உங்களது பிராந்தியத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தேர்தலை நடத்துமாறு கோரி முறைப்பாடு பதிவு செய்யுங்கள் - என்றார்.

### ரூ.14,000 உதவிக் கொடுப்பனவை...

பொருளாதார சீர்திருத்தம் நிகழும்போது, மென்மேலும் நெருக்கடிக்குள்ளாகும் பிரிவினருக்கு இத்தகைய மாதாந்த நலன்புரி கொடுப்பனவு வழங்குவது சரியானது. இது தொடர்பில் அரசையும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இலங்கையின் அபிவிருத்தி பங்காளர்களையும் பாராட்டுகிறேன்.

ஆனால், இந்த நலன்புரி கொடுப்பனவு இலங்கையின் மிகவும் நாளாந்த பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். பதுளை, கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பின் அவிசாவளை, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பெருந்தோட்ட குடும்பங்களை வழமைபோல் ஒதுக்கி விடுவதை நாம் இம்முறை ஏற்கப் போவதில்லை. நாளாந்த சம்பளம் ஆயிரம் ரூபாவாகும். ஆகவே, மாதம் 25 ஆயிரம் ரூபா என காகிதத்தில் கணக்கு எழுதி இம்மக்களை தவிர்க்கக்கூடாது. அதேபோல், பெருந்தோட்ட பிரதேசத்தில் தோட்டங்களில் வேலை செய்யாதோரும் வாழ்கிறார்கள். அவர்களும் குறைந்த வருமானம் பெறும் நலிந்த பிரிவினரே. அவர்களுக்கும் இந்த மாதாந்த நலன்புரி கொடுப்பனவு கிடைக்க வேண்டும்.

மாதாந்த மின்சாரக் கட்டண பட்டியலில் 1 முதல் 90 வரை அலகுகளை பயன்படுத்துகின்ற குடும்பங்கள், குறைந்த வருமானம் பெறும் நலிந்த பிரிவினராக கருதப்படலாம். அப்படியானால் அரசியல் தலையீடு இல்லாமல் நியாயமான ஏழை குடும்பங்களுக்கு நலன்புரி கொடுப்பனவு கிடைக்க வழி ஏற்படும். இது எனது ஆலோசனையாகும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இலங்கையின் அபிவிருத்தி பங்காளர்களின் வழிகாட்டலில் இலங்கை அரசு இந்த மாதாந்த நலன்புரி கொடுப்பனவை நலிந்த பிரிவு குடும்பங்களுக்கு கொடுக்க முடிவு செய்து இப்போது, உதவி பெறக்கூடிய குடும்பங்களின் பெயர்ப் பட்டியல் தயார் செய்யப்படுகிறது. இவற்றை மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் செய்கிறார்கள். இதற்கு பொறுப்பாக நலன்புரி நன்மைகள் சபை செயற்படுகிறது. சமூக பாதுகாப்பு சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

சமுர்த்தி கொடுப்பனவுகளில் பெருந்தோட்ட மக்களுக்கு நியாமான வாய்ப்பு இல்லை. அதேநிலைமை இதிலும் ஏற்பட்டுவிடக்கூடாது. இன்று இருக்கும் சமுர்த்திப் பட்டியலில் உதவி பெற தகுதி அற்றவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அரசியல் காரணமாக அவை நடக்கின்றன. ஆனால், இந்நாட்டில் எல்லா கணிப்பீடுகளிலும் உணவின்மை, வறுமை ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய மக்களாக அடையாளம் காணப்பட்டுள்ள பெருந்தோட்ட குடும்பங்களுக்கு உரிய உதவிகள் கிடைப்பதில்லை. அது இம்முறை நடந்து விடக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

# வட்டவான் இறால் பண்ணை விவகாரத்திற்கு ஒரு மாதத்தில் தீர்வு

## மட்டக்களப்பின் முதன்மையான இடமாக அதனை விஸ்தரிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வட்டவான் இறால் பண்ணை விவகாரத்திற்கு ஒரு மாத காலத்தில் சரியான தீர்வு காணப்பட்டு, பிரதேசத்தைச் சேர்ந்த இறால் பண்ணை பயனாளர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படுவதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் முதன்மையான இறால் உற்பத்திப் பண்ணையாகவும் அதனை விஸ்தரிக்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று (10) நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆராய்ந்தபோது இப்பிரச்சினை எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதுதொடர்பாக இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தொடர்ச்சியாக என்னோடு கலந்துரையாடி வருகின்றார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வட்டவான் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் நோக்குடன் சர்வதேச நிறுவனம் ஒன்றின் நிதிப் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட குறித்த இறால் பண்ணை தொடர்ந்து வந்த காலங்களில் தனியார் முதலீடுகளை உள்ளீர்த்து, தற்போது இடியப்பச் சிக்கலாகிக் கிடக்கின்றது.

இந்நிலையில், நேற்று சம்பந்தப்பட்ட பயனாளி களுடன் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இதனை ஆராய்ந்து ஒரு மாதத்திற்குள் தீர்வைக் காணமுடியும் என்ற கருத்தை நான் இன்று இங்கு முன்வைக்கின்றேன்.

அதைவிட, வடக்கு, கிழக்கு மாத்திரமல்லாமல் இலங்கை முழுவதும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப் பட்டிருந்தது.

இதில் அந்தந்தப் பகுதி கடற்றொழில் சங்கங்களுக்கும் முக்கிய பங்கிருக்கிறது. அவர்களின் பங்களிப்புடன் கடற்படை, கடற்றொழில் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி யிருக்கின்றேன்.

இங்கு சட்டவிரோத கடற்றொழில் மாத்திரமல்ல, கடலில் வலையை போட்டுவிட்டு அதனை எடுக்கப்போவதற்கிடையில் மீன்கள் களவாடப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாகவும் கடற்றொழில் திணைக்களம் மற்றும் கடற்படையினருடன் கலந்துரையாடி வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க இருக்கிறோம்.



விரைவாக இந்த மாவட்ட மக்கள் சுயபொருளாதாரத்தை மேற்கொள்வதுடன், நாட்டுக்கும் ஒரு வருமானத்தை தேடிக்கொடுக்கும் வகையில் உணவுப் பாதுகாப்பு விடயத்தையும் சுற்றுலாத்துறையையும் இணைத்து நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம். இதுதொடர்பாக என்னை சந்தித்த சில தரப்புகள், இந்தியாவின் கேரள மாநிலத்தின் வாவிகளில் சுற்றுலாத்துறை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டினார்கள். அதுபோல் இங்கிருக்கும் வாவிகளில் திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

குறிப்பாக, கல்லடி பழைய பாலத்தை மக்களின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பாக இங்குள்ள தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் இவ்விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்து ஒருமுடிவை எடுக்கலாம்" என்று தெரிவித்தார்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தின்போது இனங்காணப்பட்ட விடயங்கள் எவை என்று கேட்கப்பட்டதற்கு பதிலளித்த அமைச்சர், பெரும்பாலும் கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை சம்பந்தப்பட்ட விடயங்களில் மாவட்டங்களுக்கு மாவட்டம் சிறுசிறு வேறுபாடுகள் இருந்தாலும் பிரச்சினைகள் ஒரேமாதிரியானவையாகவே இருப்பதாகவும், இப்போதைய நாட்டின் பொருளாதார நிலையில் உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும் கிடைக்கின்ற வாய்ப்புகளை பயன்படுத்தி முடிந்தளவு பிரச்சினைகளை தீர்த்து வருவதாகவும் தெரிவித்தார்.

### காலையில் ரணிலை வஞ்சிக்கும் சஜித்

# இரவில் இரகசிய பேச்சுவார்த்தை

## ரங்கே பண்டார சுட்டிக்காட்டு



காலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பேசும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இரவில் இரகசியமாக ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி எதிர்க் கட்சித் தலைவர் பதவியை பாதுகாத்துக்கொடுக்குமாறு கெஞ்சுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்விரு வருடங்களில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பாதுகாத்துக்கொண்டு, அதன் பின்னர் யாலவுக்குச் சென்று யானைகளை பாதுகாத்துக்கொண்டு ஓய்வெடுப்பதே சஜித் பிரேமதாசவின் தற்போதைய எதிர்பார்ப்பாகும். ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் அறிவும், புரிதலும் இருக்கும் சகலரும் தற்போது சஜித் பிரேமதாசவுடன் இருந்தாலும் மனதளவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனேயே இருக்கின்றனர். இன்னும் சில தினங்களில் நாளுக்கு நாள் சிறந்த நாடகங்களை பார்க்கக்கூடியதாகஇருக்குமென அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 28ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** பயணங்களை முடிந்தவரை ஒத்தி வையுங்கள், மௌனம் காத்து ஆலய வழிபாடு செய்யுங்கள்.

**ரிஷபம்** திட்டமிட்ட காரியங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் உண்டு, வார்த்தைகளை பிரயோகிப்பதில் கவனம் வேண்டும்.

**மிதுனம்** கடல் தாண்டிய இடங்களிலிருந்து லாபங்கள் கிடைக்கும், காதலில் மூழ்கியிருப்பீர்கள்.

**கடகம்** வீணே மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள், பகைவர்களால் லாபங்களை அடைவீர்கள்.

**சிம்மம்** வீடு வாகன வகையில் எதிர்பாராத தொல்லைகளை சந்திப்பீர்கள், தேவையற்ற செலவுகளால் தன நட்டம் உண்டு.

**கன்னி** சகோதர வகையினர் உங்கள் தேவைகளை அறிந்து உதவுவார்கள், தாயின் உடல் நிலையில் அக்கறை செலுத்துங்கள்.

**துலாம்** யாருக்கும் யாரையும் பரிந்துரை செய்யாதீர்கள், குடும்ப ஒற்றுமையை சிதறவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**விருச்சகம்** நீங்களாக பிரச்சினைகளை தேடிக் கொள்ளாதீர்கள், முடிந்தவரை மௌனம் காப்பது நல்லது.

**தனுசு** எதை நினைத்தும் வீனே கவலைப்படாதீர்கள், நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று நினையுங்கள்.

**மகரம்** தன உதவிகள் ஏற்பட்டாலும் அதற்கேற்ப செலவுகளும் உள்ளன. தேவையற்ற பயணங்களால் உடல் அசதி உண்டு.

**கும்பம்** திட்டமிட்டு காரியங்களை செய்து வெற்றி பெறுவீர்கள், தொழில் வியாபார லாபங்கள் உண்டு.

**மீனம்** சகோதர வகையில் மனஸ்தாபங்கள் தோன்றலாம், தர்ம சிந்தனையுடன் செயல்படுங்கள்.

**திதி** : பஞ்சமி மு.ப.7.18 வரை பின் ஷஷ்டி

**நட்சத்திரம்** : கேட்டை பி.ப.12.58 வரை பின் மூலம்

**யோகம்** : சித்த யோகம் பி.ப.12.27 வரை பின் சித்த யோகம்

**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 8.04 – 9.04 மணி வரை

**ராகு காலம்** : 3.04 – 4.34 மணி வரை

**எமகண்டம்** : 9.04 – 10.34 மணி வரை

**குளிகை** :12.04 – 1.34 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மேஷ,இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** : பூசம், அனுஷம், உத்தரட்டாதி, ஆயிலியம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** -----

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**

**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**

**தொலைபேசி : 077-0525325**

**078-6759739**

# நீரில் அடித்துச் சென்ற மாணவன் உயிரிழப்பு

பொல்கொல்ல நீரேந்து பிரதேசத்துக்கு சொந்தமான, கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுல் கடே என்றழைக்கப்படும் இடத்தில் நீராடச் சென்ற 17 வயதுடைய பாடசாலை மாணவனொருவர் நீரில் அடித்துச் சென்று உயிரிழந்துள்ளதாக கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுகஸ்தொட பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 17 வயதுடைய ஐ. கவினாஷ் என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடுகஸ்தொட்டை, நிந்தவெல பிரதேசத்தைச் சேர்ந்த 15 – 17 வயதுக்குட்பட்ட 08 பேர் வரையிலான மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை பொல்கொல்ல நீர்தேக்கத்துக்குரிய வவுல் கடே எனுமிடத்துக்கு நீராடச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், அவர்களின் இருவர் நீரில் அடித்துச் சென்றதை அடுத்து அங்கிருந்த எனைய மாணவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவ்வாறு நீராடிக்கொண்டிருந்த இருவரில் ஒருவர் நீரில் அடித்துச்சென்று உயிரிழந்துள்ளதுடன், மற்றையவர் கண்டி தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இணுவில் பொது நூலகம் – சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழா





இணுவில் பொது நூலகம் மற்றும் சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் இணுவில் நூல்நிலைய கலாசார மண்டபத்தில், தலைவர் சிவலிங்கம் புரந்தரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து சிறப்பித்தவுடன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பிரதி நூலகர் கலாநிதி கல்பனா சந்திரசேகரும் ஜே 188 இணுவில் மேற்கு கிராம சேவகர் இ. ரமேஷும் சிறப்பு விருந்தினர்களாக கனடாவாழ் இ. சச்சிதானந்தம், ஜ. பரமேஸ்வரன், ஜ. திவாகரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

அமரர் பொன்னையா கனகம்மாவின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆசியுரையை புகழ் பூத்த ஆசிரியரும் நூல் நிலையத்தின் போசகருமாகிய இரா அருட்செல்வம் வழங்கினார். அதனைத் தொடர்ந்து தலைமையுரையும் விருந்தினர் உரைகளும் இடம்பெற்றன.

சமூக நலத்திட்ட வாழ்வாதார உதவி, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் மற்றும் இணுவில் பொது நூலக ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்திய துடுப்பாட்ட சுற்றுப் போட்டிக்கான வெற்றிக் கேடயம், பணப்பரிசல்கள் என்பனவும் சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் வெற்றிக் கேடயங்கள் என்பனவும் வழங்கப் பட்டன.

39 கிரிக்கெட் அணிகள் பங்குபற்றிய துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் ஸ்பேஸ் அணி மற்றும் பாபா அணிகள் மோதி ஸ்பேஸ் அணியானது வெற்றிக் கிண்ணத்தை சுவிகரித்துக்கொண்டது.

நிகழ்வில் பிரதான அம்சமாக கனடா அமைப்புக் குழுவினருடைய வாழ்வாதார உதவியாக காலாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்ற வாழ்வாதாரமானது வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருநெறி தமிழ் மறை கழகத்திற்கான ஊக்குவிப்புத் தொகையும் மற்றும் நலிவுற்ற குடும்பத்திற்காக வாழ்வாதாரமாக தையல் இயந்திரம் ஒன்றும் நிகழ்வில் வழங்கப்பட்டன.

# சஹ்ரானின் மைத்துனர் கைது!

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தில் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு மூன்று வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதன் பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்ட சஹ்ரான் ஹசீமின் மைத்துனர், குளியாபிட்டிய, கட்டுபொத்த பிரதேசத்திலிருந்து நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்திலுள்ள அவரின் மனைவியின் பெற்றோரின் இல்லத்துக்கு வந்திருந்தபோது பொலிஸாரினால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அவரின் மனைவியும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியாகக் கருதப்படும் சஹ்ரான் ஹசீம் என்பவரின் மனைவியான பாத்திமா என்பவரின் சகோதரர் என பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் இந்தத் தம்பதியினர், கொச்சிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீனிக ஜயகொடி தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்து விளக்கமறியலில் இருந்ததன் பின்னர், 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி மேல்நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். பல்கலை மாணவர்கள் இருவருக்கு உளவள சிகிச்சை

## விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் புவிராஜன் தெரிவிப்பு

தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை பயன்படுத்தியதாக குறிப்பிட்டு சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை உளவளத் துணைச் சிகிச்சைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது, யாழ்ப்பாணம் – கந்தர்மடம், பழம் வீதிப் பகுதியிலுள்ள தனியார் மாணவர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த மாணவர்கள் சிலர், தடைசெய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டமை மற்றும் போதை மாத்திரை வெற்று உறைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் பல்கலைக்கழக அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அந்த மாணவர்களில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சில மாணவர்களை உளவளத் துணை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்களின் சிபார்சின் அடிப்படையில், சந்தேகத்தின்பேரில், போதைக்கு அடிமையாகி இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர்களைத் தேவையான உளவளத் துணைச் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த மாணவர்களின் பெற்றோர்களும் நேரடியாக அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்படவுள்ளனர் என்றும், சம்பவம் தொடர்பில் பொலிஸார் எடுக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைகளிலும் பல்கலைக்கழகம் குறுக்கிடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று பரீட்சை முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் இருவர் மாத்திரமே போதை மாத்திரை உட்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள வைத்தியசாலை வட்டாரங்கள், இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு போதையிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

# விடுதிகளுக்கு மாணவர்கள் மூலம் போதைப்பொருள் விநியோகம்

## பொலிஸ் விசாரணைகளில் தகவல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் விடுதிகளை இலக்குவைத்து பெரும்பான்மையின மாணவர்களால் போதைப் பொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள தனியார் தங்குமிட விடுதியில் போதைப்பொருள் பாவனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இந்நிலையில், குறித்த விடுதியை முற்றுகையிட்ட பொலிஸார் விடுதியை சோதனையிட்ட நிலையில் போதைப்பொருள் பாவித்ததற்கான ஆதாரங்கள் விடுதியில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது பொலிஸாரால் நடத்தப்பட்ட விசாரணைகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தங்கியுள்ள விடுதிகளுக்கு சென்று போதைப்பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்கு நான்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் செயல்படுத்தப்படுவதாக தகவல்கள் வெளிவந்தன.

எனினும், மாணவர்கள் ஒன்றாக விடுதிகளில் தங்கியுள்ள நிலையில் போதைப்பொருள் பாவனையற்ற மாணவர்களும் விசாரணைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழகம் சார்ந்த வட்டாரத்திலிருந்து தகவல் வருகையில், யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடம் திட்டமிட்ட முறையில் போதைப்பொருள் பாவனை ஊக்கப்படுத்தப்படுகிறது.

புலனாய்வுப் பிரிவினருடன் நெருங்கிய தொடர்பில் உள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் போதைப் பொருட்களை பெற்று ஏனைய மாணவர்களுக்கும் விநியோகிப்பதாகவும் இதற்கு தமிழ் மாணவர்கள் சிலர் உடந்தையாகவும் உள்ள நிலையில் அதனை ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவது கடினம் என கூறப்படுகிறது.

# நான்கு மாத காலப்பகுதியில் விபத்துகளால் 564 பேர் பலி

நடப்பாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இம்மாதம் 08ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 564 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த காலப்பகுதிக்குள் இடம்பெற்ற வாகன விபத்துகளில் படுகாயங்களுக்குள்ளான 1,345 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த விபத்துகளினால் மொத்தமாக 2,446 பேர் காயங்களுக்குள்ளாகியள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த ஐந்து தினங்களில் வாகன விபத்துகளினால் 21 விபத்க்கள் இடம்பெற்றுள்ளதுடன், அந்த விபத்துகளில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

# ஆயுர்வேத மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்த சட்டம்

நாட்டில் இயங்கிவரும் ஆயுர்வேத மசாஜ் நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுதேச மருத்துவ கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதற்கான பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கும் அரசாங்கம் தீர்மானித் துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாட்டில் பல ஆயுர்வேத மசாஜ் நிலையங்கள் விபசார விடுதிகளாக இயங்கி வருகின்றன.

ஆயுர்வேத மசாஜ் நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், அவை மேற்பார்வைக்கு உட்பட்டவை அல்ல. மசாஜ் நிலையங்களில் காணப்படும் ஆயுர்வேத சிகிச்சையாளர்கள் பலர் முறையான பயிற்சிகளை பெறாதவர்களாக இருக்கிறார்கள்.

ஆயுர்வேத சிகிச்சையாளர்களாகுவதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கு தேசிய தொழில் தகுதி நிலை 4 சான்றிதழைப் பெறுவதற்கு வழிவகுக்கும் புதிய நான்கு மாத பாடநெறியை ஆயுர்வேத திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஏப்ரல் 11ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை


# பரிதவிக்கும் பாகிஸ்தான்!

கொரோனா முடக்கத்துக்குப் பிறகு உலக பொருளாதாரம் மீண்டும் உயர்ந்து வந்த நிலையில், பல்வேறு காரணங்களினால் உலக நாடுகள் மீண்டும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கும் என உலக வங்கி எச்சரித்துள்ளது.

உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், ''ரஷ்ய - உக்ரைன் போரின் விளைவால் உலக நாடுகளில் உணவு தட்டுப்பாடும் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. அதேபோன்று சீனாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் அதன் ஏற்றுமதி நாடுகளான ஐரோப்பிய நாடுகளும் பொருளாதார நெருக்கடியை சந்திக்கும் நிலை வரலாம். சீனாவுடனான அமெரிக்க மோதல் போக்கும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரும் தொடர்ந்து நீடித்தால் அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு சிக்கல் ஏற்படும். இத்தகைய சூழலால் வளர்ந்த நாடுகளும் இந்த ஆண்டில் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்திக்கும். உலகின் பெரிய நாடுகள் விதித்துள்ள வட்டி உயர்வும் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருக்கும். பொருளாதார நெருக்கடியால் ஏழை நாடுகளில் உணவு, உரம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும்'' என்று தெரிவித்துள்ளது.

அத்துடன் உலக வங்கி பொருளாதார ஆண்டறிக்கையில் எந்தெந்த நாடுகள் பொருளாதார நெருக்கடியை சந்திக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்த ஆண்டு ஏழை நாடுகளுக்கு உலக வங்கி அளிக்கும் நிதி உதவியை பாதியாக குறைக்கவும் முடிவெடுத்துள்ளது.

சமீப காலமாக நமது நாட்டுக்கு அடுத்தபடியாக பாகிஸ்தான் அதிகளவு பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகிறது. இயற்கை சீற்றம், உணவுத் தட்டுப்பாடு, வேலையில்லாத் திண்டாட்டம் என்பன பாகிஸ்தானில் அதிகரித்துள்ளன. இத்தகைய சூழலில் கடும் பொருளாதார நெருக்கடியால் அந்நாட்டு மக்களின் இயல்புநிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக ஏறியுள்ளது.

எரிபொருள், உணவுப்பொருள் ஆகியவற்றுக்கு அதிக தட்டுப்பாடு நிலவுவுவதால் அதற்கான விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது. பாகிஸ்தான் தனது பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தாமல் வேறு விடயங்களில் கவனம் செலுத்தியதால் பொருளாதார நெருக்கடியில் சிக்கியதாக பொருளாதார வல்லுனர்கள் கூறுகின்றனர். மேலும், அதிக கடன்களை வாங்கியே தனது நிதிநிலையை சரி செய்தநிலையில், கடன் அளவு மிகவும் அதிகரித்துள்ளது. இதை சமாளிக்க அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள், அரசு துறைகளுக்கு பல்வேறு சலுகைகள் நிறுத்தப்பட்டதுடன், அரசு ஊழியர்களின் சம்பளத்தையும் அந்நாட்டு அரசு குறைத்துள்ளது.

அடுத்து பராமரிக்க முடியாத வெளிநாட்டு தூதரகங்களை அதிகளவு குறைத்துக் கொண்டுள்ளது. உளவு அமைப்புகளுக்கான நிதி இதுவரை அதிகமாக செலவிட்டு வந்தநிலையில், அதையும் குறைத்துள்ளது. இப்படி பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இந்த குழப்ப சூழலில் இப்போது அந்நாட்டு அரசு நிர்வாகம் செயல்பட முடியாமல் ஸ்தம்பித்துள்ளது.

பாகிஸ்தான் வரலாற்றில் இதுவரை இல்லாத நிகழ்வாக, இராணுவத்திலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இராணுவ வீரர்களுக்கு ஒரு நாளைக்கு இருவேளை உணவுகூட சரியான முறையில் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர். இதற்கான தீர்வு பற்றி இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். நிதிப் பற்றாக்குறையால் மக்களுக்கு அடிப்படை சேவைகளை கூட செய்யமுடியாமல் பாகிஸ்தான் தவித்து வருகிறது. பாகிஸ்தான் பொருளாதாரத்தை மீட்க, சீனா 700 மில்லியன் டொலர் பணமாக கொடுத்து நிதியுதவி செய்துள்ளது.

இந்த 700 மில்லியன் டொலர் கடனை முந்தைய கடன்களை திருப்பிச் செலுத்தவே வாங்கியது. இதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் எதுவுமில்லை என்பதால் இலங்கையை விட மோசமான நிலைக்கு இது வழிவகுக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரே நேரத்தில் பல வகையில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை சமாளிக்க பாகிஸ்தான் முயன்று வருகிறது. ஆனால், பாகிஸ்தானின் அரசியலும் மேட்டுக்குடி வர்க்கமும்தான் பாகிஸ்தானின் அவலநிலைக்கு காரணம். முன்னாள் பிரதமர் இம்ரான் கான் அதிகாரத்தையும் நீதிமன்றத்தையும் எதிர்த்துப் போராடி சிக்கல்களை ஏற்படுத்தி வருகிறார்.

மறுபுறம், பஞ்சாப்பில் தேர்தலை ஒத்திவைத்த தேர்தல் ஆணைக்குழுவின் முடிவு குறித்து பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் புதிய சர்ச்சையில் சிக்கியுள்ளது. பாகிஸ்தானில் இம்ரான் கான் ஆட்சிக்கு வந்ததில் இருந்தே அரசியல் நாடகம் நடந்து வருகிறது. சமீபத்தில், இம்ரான் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டபோது, பெரியளவில் வன்முறை காணப்பட்டது. இந்த அரசியல் நாடகங்களுக்கு மத்தியில், நிதியமைச்சர் இஷாக் தாரினால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு உடன்பாட்டை எட்ட முடியவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பாகிஸ்தான் 1.1 பில்லியன் டொலர் கடனை எதிர்பார்க்கிறது.

இந்த நெருக்கடியிலும், மார்ச் மாதத்தில் ஏழைகளுக்கு உதவ அரசாங்கம் எரிபொருள் மானியங்களை அறிவித்தது. ஆனால், அவற்றை செயல்படுத்துவது சிக்கலாக உள்ளது. இவை பாகிஸ்தானின் நிதி மற்றும் எரிசக்தி பற்றாக்குறையை அதிகரிக்கும். 2023 பெப்ரவரியில் பணவீக்கம் 30 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. அது மார்ச் மாதத்தில் 35 சதவீதத்தை எட்டியது. இது 1974க்குப் பிறகு ஏற்பட்டுள்ள மிக மோசமன நிலையாகும். உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. அதன் கூடுதல் சுமை ஏழைகள் மீது விழுகிறது. இறக்குமதி மீதான வரியால், இறக்குமதியை நம்பியுள்ள முக்கிய தொழில்களும் முடங்கியுள்ளன. இறக்குமதி இல்லாததால் ஏற்றுமதியும் கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு தொடர்ந்து டொலர்கள் கடத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்க டொலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைவதற்கு இதுவும் ஒரு காரணம். எனினும், நிதி அமைச்சர் தான் பதவியேற்பதற்கு முன்பு, டொலருக்கு எதிரான பாகிஸ்தான் ரூபாவின் மதிப்பு வலுவடையும் என்று கூறியிருந்தார். பாகிஸ்தானின் மோசமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில், இம்ரான் கான் அரசியல் ரீதியாக அரசாங்கத்தை ஆட்டிப் படைத்து வருகிறார். அவரது ஆதரவாளர்களில் பெரும்பாலோர் நகர்ப்புற இளைஞர்கள். முக்கியமாக பாகிஸ்தான் இராணுவத்தில் சேர்க்கப்படும் இளம் அதிகாரிகளும், வீரர்களும் இம்ரான் கானுக்கு ஆதரவான நகரங்களைச் சேர்ந்தவர்கள்.

பஞ்சாப் மற்றும் கைபர் பக்துன்க்வாவில் பெரும்பான்மை அரசு கலைக்கப்பட்டிருப்பது தேசிய அரசியலில் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தான் வெளிநாடுகள் மூலம் சந்திக்கும் பிரச்சினைகளை விட உள்நாட்டுப் பிரச்சினைகளுடன் அதிகம் போராடி வருகிறது. அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும்வரை பாகிஸ்தானின் நிலைமை இப்படியே தொடரப்போகிறது என்பதுதான் கசப்பான உண்மை.

## ஜனநாயக நியமங்களை மீறும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை

# அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும்!

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை ( Anti - Terrorism Bill) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தாமதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்த தீர்மானத்தை வரவேற்றிருக்கும் தேசிய சமாதானப் பேரவை இந்த சட்டமூலம் ஜனநாயக பரப்பிலும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு இருக்கும் உரிமைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை செலுத்தக்கூடியதாக இருப்பதால், அதை சமர்ப்பிப்பது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

எந்தவொரு சட்ட சீர்திருத்தத்திலும் அடிப்படை உரிமைகளும் குடிமக்களின் பாதுகாப்பும் உத்தரவாதப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக அரசியலமைப்பின் பிரகாரம் மக்களின் அதிகாரம் அவர்களின் பயனுக்காகவே அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இவ்விரு குறிக்கோள்களையும் அடையத் தவறுகிறது. அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய சட்டமூலம் அது பதிலீடு செய்ய உத்தேசிக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் விட மிகவும் மோசமான பல அம்சங்களை கொண்டதாக இருக்கிறது.

சட்டமூலத்தின் ஏற்றுக்கொள்ளமுடியாத பல அம்சங்களில் பயங்கரவாதத்துக்கு அது கொடுக்கும் தெளிவற்றதும் விசாலமானதுமான வியாக்கியானம் மிகவும் முக்கியமானதாகும். அரசாங்க சொத்துகளையும் ஏன், தனியார் சொத்துகளையும் கூட களவாடுதையும் தொழிற்சங்க நடவடிக்கையையும் சட்டமூலம் பயங்கரவாதச் செயல்கள் என்று வியாக்கியானப்படுத்துகிறது. யார் யாரை கைதுசெய்ய முடியும்? அவர்களை யாரால் கைதுசெய்யமுடியும்? எந்த நோக்கத்துக்காக அவர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள் போன்ற விடயங்களைப் பொறுத்தவரை சட்டமூலம் மிகவும் பரந்தளவுக்கு இடங்கொடுப்பதாக அமைகிறது.

எதிர்ப்புக் காட்டுதல், பிரசுரங்களை வெளியிடுதல், அரசாங்கத்திடம் இருந்து நடவடிக்கைகளை எதிர்பார்த்து கோரிக்கைகளை முன்வைத்தல் மற்றும் இன, மதத் தலங்களுடன் தொடர்புடைய தகராறுகள் உட்பட பெருவாரியான நியாயபூர்வமான நடவடிக்கைகளை சட்டமூலம் பயங்கரவாத வீச்செல்லைக்குள் கொண்டுவருகிறது. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தாங்கள் நியாயமான முறையில் சந்தேகிக்கும் எவரையும் பிடியாணையின்றி கைதுசெய்வதற்கு பொலிஸாரையோ, இராணுவத்தினரையோ, கரையோரக்காவல் படையினரையோ சட்டமூலம் அனுமதிக்கிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலீடு செய்வதற்கு புதிய சட்டமூலத்தை வரைந்தவர்களின் மனப்போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்று தோன்றுகிறது. இது துரதிர்ஷ்டவசமானது. பயங்கரவாதம் என்று காரணத்தைக் கூறி அரசியல் செயற்பாடுகளை ஒடுக்குவதில் நாட்டம் கொண்ட மனப்போக்கே இருக்கிறது என்பதற்கான அறிகுறிகளே தெரிகின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நாம் அனுபவித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பு பெருமளவில் இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 14 வருடங்களாக சிறைவைக்கப்பட்டிருந்த மூவர் கடந்த மாதம்தான் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர். ஒருவரை கைதுசெய்யும் பொலிஸாரோ அல்லது இராணுவத்தினரோ அவரை தாங்கள் தெரிவுசெய்யும் ஓரிடத்தில் 24 மணித்தியாலங்கள் வரை தடுத்துவைப்பதற்கு புதிய சட்டமூலம் அனுமதிக்கிறது. நிலைவரத்தை பொறுத்து அவரை மேலும் கூடுதலான நேரம் தடுத்துவைக்கமுடியும்.

அவ்வாறு கைதுசெய்யப்படக்கூடிய ஒரு இளைஞனின் அல்லது யுவதியின் அவலத்தை நினைத்துப் பாருங்கள். கைதுசெய்யப்படும் ஒருவருக்கு எதிராக பிரதி பொலிஸ்மா அதிபர் தரத்திலுள்ள ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கையெழுத்திட்டுப் பிறப்பிக்கக்கூடிய தடுப்புக்காவல் உத்தரவுக்குப் பிறகு அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் மூன்று மாதங்களுக்குத் தடுப்புக்காவலில் வைக்கமுடியும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அரசியலமைப்பை மீறுவதுடன், ஜனநாயக சமுதாயம் ஒன்றில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரங்களுக்கும் மனித உரிமைகளுக்கும் ஆபத்தை உண்டாக்கி அவற்றை பயங்கரவாதமாக உருமாறாட்டம் செய்வதால் அதை தேசிய சமாதானப் பேரவை எதிர்க்கிறது. புதிய தேவைகளை கையாள்வதற்கு, அவசியமானால் தற்போது நடைமுறையில் உள்ள தண்டனைச் சட்டக் கோவையையும் குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையையும் பலப்படுத்தலாம் என்று நாம் யோசனை முன்வைக்கிறோம். அதற்கு பதிலாக பயங்கரவாதத்தை கையாள்வதற்கு முற்றிலும் புதிய சட்ட மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் தேவையில்லை.

புதிய பாதுகாப்பு சட்டங்கள் அவசியம் என்று கருதினால் அவற்றை எமது அரசியலமைப்பும் சர்வதேச நியமங்களும் நெறிப்படுத்துகின்ற மனித உரிமைகள் வரையறைக்குள் இயற்றுவது அவசியம்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை கோருகிறது. இல்லாவிட்டால் விளைவுகளைப் பொருட்படுத்தாமல் அடிப்படை மனித உரிமை மீறல்களை செய்வதற்கும் குறைகளை சுட்டிக்காட்டி கண்டிப்பவர்களையும் எதிர்க்கருத்து கொண்டவர்களை மௌனமாக்குவதற்கும் அந்த சட்டம் அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கும்.



# குறைந்த எடையில் உறுதியான சுவர்

ஏற்கனவே முப்பரிமாண (3டி) அச்சு இயந்திரம் மூலம் கட்டடம் கட்டுவது சிக்கனமானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. 3டி அச்சு இயந்திரங்கள், இரும்பு, மணல், சீமெந்து போன்ற பல கட்டுமானப் பொருட்களைக் குறைவாகப் பயன்படுத்தியே கட்டடங்களைக் கட்டுகின்றன. இப்போது அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இன்னும் ஒருபடி மேலே சென்றுள்ளனர்.

அவர்கள் உருவாக்கியுள்ள புதிய முப்பரிமாண அச்சு முறைப்படி, சுவர்களை விரும்பிய வடிவில் கட்ட முடியும். அதுமட்டுமல்ல, சுவரின் எடை 72 சதவீதம் வரை குறைவாக இருக்கும். அதே நேரம், அந்த சுவர்களின் உறுதித்தன்மை, வழக்கமாக சீமெந்தினால் இழைத்துக் கட்டப்படும் சுவர்களுக்கு இணையாக இருப்பதாக மிச்சிகன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சுவர்களுக்கு எங்கே எடை அதிகம், எங்கே எடை குறைவு என்பதை ஒரு கணினி மாதிரியில் பரிசோதித்து, அந்தக் குறிப்புகளை கட்டடம் கட்டும் முப்பரிமாண அச்சு இயந்திரத்திடம் கொடுத்தால் போதும். வடிவ அழகோடு, எடை குறைவாகவும் உறுதி குறையாமலும் சுவர்களை கட்டித் தருகிறது. ஆகவே, கட்டுமான செலவில் 72 சதவீதம் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## நக்கல் நமசிவாயம்

ஜனாதிபதித் தேர்தல்தான் அடுத்து வரப்போகுதெண்டு ஒரே பேச்சாக் கிடக்குது... அப்போ அதுக்கு மட்டும் காசு இருக்குதோ..?



## இன்றைய நாளில்...

- 1829 – கொழும்பு, புறக்கோட்டை நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1865 – ஆபிரகாம் லிங்கன் தனது கடைசி உரையை நிகழ்த்தினார்.
- 1905 – ஐன்ஸ்டீன் தனது சார்புக் கோட்பாட்டை வெளியிட்டார்.
- 2006 – ஈரானிடம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் இருப்பதாக ஈரான் அரசுத்தலைவர் மகுமூத் அகமதி நெச்சாத் அறிவித்தார்.
- 2012 – இந்தோனேசியாவில் சுமாத்ரா கடற்பகுதியில் 8.7 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன்போது இலங்கை, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இலேசான நிலநடுக்கம் உணரப்பட்டது.

# சிறு தவறுகள் செய்த நபர்களை வீட்டுக்காவலில் வைப்பதற்கான சட்டத்தை தயாரிக்க குழு நியமனம்

## மரணதண்டனை கைதிகளுக்கு மறுவாழ்வளிக்க 06 இடங்கள் நிறுவப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச அறிவிப்பு





சந்தேகநபரொருவர் எவ்வாறானதொரு தவறு செய்திருந்தாலும் சிறை பிடிக்கப்பட்டதன் பின்னர் சந்தேக நபர்களைப் பேணி பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பாரம்பரியமான குழுக்களுக்கு அப்பாற்பட்ட மறுக்கப்பட்ட வேலைத்திட்டம் சிறைச்சாலை கண்காணிப்பு குழுக்களால் முன்னெடுக்கப்படவேண்டும். சிறிய தவறுகள் செய்த நபர்களை வீட்டுக்காவலில் வைக்கலாமா என்பதை ஆய்வுசெய்து, சட்டங்களை உருவாக்க தனியான குழுவொன்றை நியமிக்க தீர்மானித்துள்ளதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சருக்கும் சிறைச்சாலை கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கும் இடையிலான் சந்திப்பொன்று அமைச்சின் பிரதான அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் 35(1) உறுப்புரையின் பிரகாரம் சிறைச்சாலை திணைக்களத்துக்குச் சொந்தமான விடயப்பரப்பினூடாக அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 03 வருடங்களுக்கு நாடு முழுவதுமுள்ள சகல சிறைச்சாலைகளுக்கும் பிரதேச சிறைச்சாலை கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். அதற்கமைய, கொழும்பு மெகசின் சிறைச்சாலை, கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலை, கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை, வட்டரெக மற்றும் மீகமுவ சிறைச்சாலைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கு இதன்போது தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களினால் சிறைச்சாலைகளுக்குள் சென்று வாரத்துக்கு ஒருமுறை கைதிகளின் நலன்சார் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிக்க வேண்டும் என்பதுடன், கைதிகளின் அறிவுசார் விருத்தியை ஏற்படுத்துவதற்காக சிறைச்சாலையில் முன்னெடுக்கப்பட்டுவரும் பொது வசதிகள் தொடர்பில் தேடிப்பார்ப்பது இந்தக் குழுவின் கடமையாகவுள்ளது.

நாடு முழுவதுமுள்ள 28 சிறைச்சாலைகளையும் உள்ளடக்கும் வகையில் இந்தக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்படவுள்ளதுடன், இந்தக் குழுவுக்கான பதவிகள் விசேட பதவிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அமைச்சர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 26 ஆயிரம் வரையிலான கைதிகள் இருக்கிறார்கள். அவர்களில் 8,000 வரையிலானவர்கள் குற்றவாளிகளாக இருக்கின்றனர்.

நபரொருவர் சிறையிலடைப்படுவதற்கு ஏதாவதொரு சமூக நிலைமை காரணமாக இருக்கலாம். எந்த தவறாக இருந்தாலும் சிறையிலடைக்கப்பட்டதன் பின்னர் அவர்களை பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப்படும் வசதிகளுக்கு மேலதிகமாக சிறைச்சாலை கைதிகளுக்குத் தேவையான நலன்புரி வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு கண்காணிப்புக் குழு செயற்பட வேண்டும்.

1934ஆம் ஆண்டின் பின்னர் முதன்முறையாக மனிதாபிமான அடிப்படையில் எமது நாட்டுக்கு சிறைச்சாலை ஒழுங்குவிதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மரணதண்டனை அளிக்கப்பட்டு சிறைச்சாலையில் இருக்கும் நபர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக சிறைச்சாலைக்குள்ளேயே 06 இடங்கள் நிறுவப்பட்டுள்ளது.

பாரம்பரிய குழுக்களுக்கு அப்பாலான முன்னேற்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை சிறைச்சாலை கண்காணிப்பு குழு முன்னெடுக்க வேண்டும். அதற்கான உயர்ந்தபட்ச உதவியைப் பெற்றுக்கொள்ள வேணடும். சிறியளவான தவறு செய்த நபர்களை வீட்டுக்காவலில் வைக்க முடியுமா என்பதை தேடிப்பார்த்து அதற்கான சட்டத்திட்டங்களை உருவாக்குவதற்காக தனியான குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் நீதி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா உள்ளிட்ட கொழும்பு மெகசின் சிறைச்சாலை, கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலை, கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை, வடரெக மற்றும் மீகமுவ சிறைச்சாலைகள் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் நியமிக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# வவுனியா வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை





தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு அமைச்சின் உத்தரவுக்கமைய வவுனியா வர்த்தக நிலையங்களில், அதிகாரிகளினால் விசேட சோதனை நடவடிக்கையொன்று நேற்று (10) முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா இலுப்பையடி, சந்தை உள்வட்ட வீதி, கண்டி வீதி, பழைய பஸ் நிலையம், நெளுக்குளம், பசார் வீதி ஆகிய பகுதிகளிலேயே இந்த திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக, வவுனியாவிலுள்ள சதொச விற்பனை நிலையம், காகில்ஸ் பூட்சிற்றி மற்றும் தனியார் பல்பொருள் விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள் என்பவற்றில் இவ்விசேட சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது நிறுத்தல் தராசுகள் முத்திரையிடப் பட்டுள்ளதா, நிறுத்தல் அளவைகள் சரியாக உள்ளனவா, பொதி செய்யப்பட்ட பொருட்களின் நிறுத்தல் அளவைகள் சரியானவையா என்பது குறித்து அதிகாரிகளினால் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# சீதா எலிய - சண்டதன்ன பூங்காவிலுள்ள பெயர்ப்பலகைகள் எரித்து அழிப்பு





(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா, சீதா எலிய, சண்டதன்ன பூங்காவிலுள்ள பெயர்ப்பலகைகள் மற்றும் உயரங்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகள் சிலரால் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக சீதாஎலியா விவசாய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீதா எலிய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவன துணைப் பணிப்பாளர் எம்.சி.ஜயசிங்க தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள 10 மிக உயரமான மலைத்தொடர்களில் ஒன்பது மலைத்தொடர்கள் இந்த இடத்தில் காணப்படுகின்றன. பிதுரங்கல, தொட்டுகொலை கந்த, கிகிலியாமான, கிரேட் வெஸ்டன், கொனிகல் ஹில், கிரிகல்பொத்த, பரியால கந்த, ஹக்கல மற்றும் நமுனுகுல மலைத்தொடர்களின் பெயர்ப்பலகைகள் மற்றும் அவற்றின் உயரங்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகள் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

சண்டதன்ன சூழலியல் பூங்காவை பார்வையிட வந்தவர்கள் அல்லது காடுகளிலிருந்து பூங்காவிற்குள் பிரவேசித்த சிலரோ அல்லது குழுக்களோ இதனை செய்திருக்கலாம். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சண்டதன்ன சூழலியல் பூங்கா மிகவும் உணர்திறன் வாய்ந்த சூழலியல் வலயத்தில் அமைந்துள்ளதால், சுற்றுலாப் பயணிகள் அவ்வாறான சேதங்களை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கழிவுகளை கொட்டுவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# புத்தாண்டு காலப்பகுதியில் பார்வை பாதிப்புகள் அதிகரிக்கும் சாத்தியம்

## கண்சார் அறுவைசிகிச்சை வைத்திய நிபுணர்களின் சங்கம் எச்சரிக்கை

தமிழ் - சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் ஏற்படும் பல்வேறுபட்ட அனர்த்தங்களினால், கண்களுக்கு ஏற்படும் ஆபத்துகளில் அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருக்குமென கண்சார் அறுவைசிகிச்சை வைத்திய நிபுணர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய கண் வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார். பட்டாசு மற்றும் வாணவேடிக்கை பொருட்களின் பாவனை அதிகரிப்பு, உள்ளக விபத்துகள் மற்றும் வீதி விபத்துகள் அதிகளவில் பதிவாகலாம் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கண்சார் அறுவை சிகிச்சைக்கான விசேட வைத்திய நிபுணர் கபில பந்துதிலக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விபத்துகளினால் வாழ்நாள் முழுவதும் கண்பார்வையை இழக்கவோ அல்லது நிலையான பார்வையில் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

ஆண் குழந்தைகள் மற்றும் இளைஞர்களில் அநேகமானவர்கள் அனர்த்தங்களுக்கு உள்ளாகுகிறார்கள். அநேகமான விபத்துகள் பட்டாசு கொளுத்துவதாலேயே இடம்பெறுகின்றன. பட்டாசு கொளுத்துவதால் மாத்திரம் 32 சதவீத அனர்த்தங்கள் பதிவாவதுடன் வாணவேடிக்கைகளினாலும் அதிகளவு விபத்துகள் இடம்பெறுகின்றன.

குறிப்பாக, சிறிய குழந்தைகளை இந்த நிலைமை மிகவும் பாரதூரமாக பாதிப்பதுடன், காயங்கள் முழுவதுமாக குணமடைந்தாலும் கண்பார்வையை இழப்பதற்கான வாயப்புகள் இருக்கின்றன. ஆகவே, இந்த பண்டிகைக் காலத்தில் பட்டாசு உபயோகத்தை தவிர்ப்பது சிறப்பானதாக அமையும். அவ்வாறு பாட்டாசு போன்ற வேடிக்கை பொருட்களை பயன்படுத்துவது தவிர்ப்பது நன்மை என்றும் அவ்வாறு பயன்படுத்துவதானால் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பொலிகண்டியில் 84 கிலோ கேரளா கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம், பொலிகண்டி கடற்கரையில் 84 கிலோ கிராம் கேரள கஞ்சா தொகை நேற்று அதிகாலை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கடற்பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த கடற்படையினர் இந்த கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு



கணக்காய்வு சேவை ஆணைக்குழுவுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (09) பாராளுமன்றத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கணக்காய்வாளர் நாயகம், பதவி அடிப்படையில் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராவார். அதற்கமைய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு டபிள்யூ.பி.சி.விக்ரமரத்ன பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அது மாத்திரமன்றி ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற நீதிபதி நிஹால் சுனில் ராஜபக்ஷ, நந்தசீலி கொடகந்த, ஞானானந்தராஜா தேவஞானன், ஏ.எம்.தர்மஜித் நயனகாந்த ஆகியோரும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

# வடமாகாண தொழிற்றுறை வர்த்தகச் சந்தை நேற்றுமுதல் ஆரம்பம்






சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வட மாகாண தொழிற்றுறை திணைக்களம் மற்றும் யாழ். இந்தியத் துணைத் தூதரகம் இணைந்து நடத்தும் வடமாகாண தொழிற்றுறை வர்த்தக சந்தை – 2023 நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த வர்த்தக சந்தை, நேற்றுமுதல் நாளைய தினம் வரை மூன்று தினங்கள் காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரை இடம்பெறவுள்ளது.

வடமாகாண தொழிற்றுறை திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். இந்தியத் துணைத் தூதரக தலைமை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ், வடமாகாண மகளிர் அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தேசிய நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் நிஹால் தேவகிரி, ஹற்றன் நஷனல் வங்கியின் வடமாகாண பிராந்திய வர்த்தக தலைமை அதிகாரி நிஷாந்தன் கருணைராஜ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் சுயதொழில் முயற்சியாளர்களாகவும், உற்பத்தியாளர்களாகவும் உள்ளவர்களின் உற்பத்திகளின் கண்காட்சியும், விற்பனைச் சந்தையும் இடம்பெற்றன.

# பஸ் ரிக்கட்டுக்குப் பதிலாக கியூ.ஆர். முறை அறிமுகம்

இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பஸ்களில் பயணிக்கும் பயணிகளிடம் கட்டணம் அறவிடுவதற்குப் பதிலாக, கியூ.ஆர். முறை அல்லது அட்டை முறையை இந்த வருடத்துக்குள் அறிமுகப்படுத்தவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்று நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒருசில பஸ்களில் முறையாக கட்டண அறவீடுகள் இடம்பெறாமையின் காரணமாகவே ஒருசில போக்குவரத்துச் சபைக்குரிய டிப்போக்கள் நட்டத்தை சந்தித்து வருகின்றன. 2025ஆம் ஆண்டாகும்போது இலங்கை போக்குவரத்துச் சபையை நட்டமற்ற நிறுவனமாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளது. மத்திய மலைநாட்டுப் பகுதி மற்றும் கிராமிய விதிகளுக்கு புதிய பஸ்களை சேவைக்கு அமர்த்துவதே எங்களின் எதிர்பார்ப்பாகும் - என்றார்.

# காலிமுகத்திடலில் இடம்பெற்ற மாபெரும் இப்தார் நிகழ்வு

(ஏ.எஸ்.எம்.ஜாவித் )











புனித ரமழானை முன்னிட்டு கொழும்பு வாழ் இளைஞர்கள் அமைப்பு இணைந்து, நேற்று முன்தினம் கொழும்பு காலிமுகத்திடலில் சகல இன மக்களும் கலந்துகொள்ளும் வகையில் மாபெரும் இப்தார் நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் மூவினத்தையும் சார்ந்த சமூக செயற்பாட்டாளர்களும் பொதுமக்களுமாக சுமார் 1500இற்கும் மேற்பட்டவர்களும் ஒருசில வெளிநாட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த தினம் அரகல நடந்து ஒருவருட தினமாக இருந்ததால் ஏதும் ஆர்ப்பாட்டம் நடந்து விடுமா என்ற அச்சத்தில் பொலிஸாரும் பிரசன்னமாகி , அரகலவில் கலந்துகொண்டவர்கள் இங்கு வர முடியாது என்று ஏற்பாட்டாளர்களுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டு ஒருசிலரை திருப்பியனுப்பினர்.

இதன்போது ஏற்பாட்டாளர்கள் இது அரகல அல்ல இது சமய ரீதியிலான ஒரு சமூக ஒற்றுமைக்கான ஏற்பாடு என்றும் இதனை குழப்ப வேண்டாம் என்றும் தெரிவித்தனர். குறித்த நிகழ்வு விசேட உரைகள் இன்றி எந்தவித குழப்பங்களும் இன்றி அமைதியாக இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் பொலிஸாரின் தலையீட்டால் கவலை கொண்டிருந்தனர் . இதன்போது நோன்பு துறப்பதற்கான மஹ்ரிபு தொழுகைக்கான அதானை மௌலவி ஸக்கீப் அயினியும் விசேட துஆப் பிரார்த்தனையை மௌலவி ஏ.என்.எம்.பிர்தௌசும் வழங்கினர்.

இதேவேளை, இப்தார் நிகழ்வு முடிவடைந்த பின்னர் ஏற்பாட்டாளர்கள் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர் இதன்போது இப்தாரில் கலந்துகொண்ட ஜேர்மனைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளான இளம் தம்பதிகள் தாமும் குப்பைகள் சேகரிக்கும் பொலித்தீன் பையை எடுத்து கை உறைகளின்றி குப்பைகளைப் பொறுக்கி சேகரித்தமையை அனைவரும் கண்டு அவர்களை பாராட்டினர்.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.04.09
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5085 | ரூ. 14,160,947.00 | T | 0 9 5 5 2 5 |
| கொவிசெத | 3327 | ரூ. 95,638,835.44 | F | 12 19 33 48 |
| ஜாதிக சம்பத | 1540 | ரூ. 11,980,688.80 | கும்பம் | 9 4 4 7 9 7 |
| தன நிதானய | 1115 | ரூ. 85,657,985.20 | D | 08 20 48 72 |
| ராசி சுப பலன் Handahana | 394 | ரூ. 2,977,215.00 | துலாம் (விசேட இலக்கினம்: துலாம்) | 09 15 21 47 |
| மெகா பவர் | 1433 | ரூ. 313,948,634.00 | V (சுப்பர் இலக்கம் 13) | 05 15 74 76 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## கந்தப்பளை விபத்தில் இளைஞர் படுகாயம்

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா - உடப்புஸ்ஸலாவை பிரதான வீதியில் கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்பாலம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்து சம்பவத்தில், இளைஞர் ஒருவர் பலத்த காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியாவிலிருந்து கந்தப்பளை பகுதியை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் கந்தப்பளை பகுதியிலிருந்து நுவரெலியா பகுதியை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேருக்கு நேர் மோதுண்டு விபத்து சம்பவித்துள்ளதாக கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் இந்த விபத்து சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் வேகக் கட்டுப்பாட்டை மீறியே இவ்விபத்து சம்பவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காயங்களுக்குள்ளான இளைஞர் மது அருந்திய நிலையில் மோட்டார் சைக்கிளை வேகமாக செலுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## சத்திரசிகிச்சையின்போது பெண் மரணமான சம்பவம்

# பேராதனை வைத்தியசாலையில் விசேட விசாரணைகள் ஆரம்பம்

(கண்டி செய்தியாளர்)

பேராதனை வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையின் பின் பெண் ஒருவர் மரணமடைந்துள்ள விடயம் தொடர்பாக பேராதனை வைத்தியசாலை மற்றும் சுகாதார அமைச்சு என்பன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

கண்டி, பேராதனை வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைமூலம் குழந்தை ஒன்றைப் பிரசவிக்க அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் பிரசவத்தின் பின் மரணமடைந்துள்ளார். இவர் கண்ணொறுவா, முருதலாவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். தனது இரண்டாவது பிரசவத்திற்காகவே இவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக குடும்ப அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

பேராதனை வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் அர்ஜுன் திலகரத்ன இது தொடர்பாக தெரிவிக்கையில், இரண்டாவது மகப்பேற்றின் போதே இவ்மரணம் சம்பவித்துள்ளது. இவருக்கு 27 வயது. மேலும் இவரது மரணத்திற்கு சரியான காரணம் இன்னும் தெரியவில்லை. வைத்திய அறிக்கை கிடைத்துப் பின்பே அது தெரிய வரும் என்றார்.

சத்திர சிகிச்சை முடிவடைந்து மூன்று தினங்களின் பின்பே இம்மரணம் சம்பவித்துள்ளதாகவும், சிசு நலமுடன் இருப்பதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

மயக்க மருந்து தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளபோதும் அறிக்கை கிடைக்கும் வரை எதுவும் குறிப்பிட முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.



மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## ஹட்டன் நகருக்கு விசேட பாதுகாப்பு

(மனூர சுதத் செல்லஹேவா)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஹட்டன் நகருக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சித் ஜயசேன தெரிவித்தார்.

பொதுமக்களின் பாதுகாப்பு கருதி சிவில் உடைகளிலும் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இக்காலப்பகுதியில் நகை, பணம் உள்ளிட்டவற்றை திருடுபவர்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக அவற்றைத் தடுக்கும் நோக்கிலேயே விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



**தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் இயங்கும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.**





**புனித ரமழானை முன்னிட்டு உக்குவளை பரகஹவெல மஸ்ஜித் ஸலாம் ஜும்ஆ மஸ்ஜிதில் அதன் நிர்வாகத்தினர் இப்தார் வைபவமொன்றை இம்மஸ்ஜிதில் ஏற்பாடு செய்திருந்தனர். இதன் போது மஸ்ஜித் சம்மேளனத் தலைவரும் சமாதான தூதுவருமான தேசபந்து அல்ஹாஜ் எச்.எம். முஹ்தார் மற்றும் மஸ்ஜித் மௌலவிகள் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படப் பிடிப்பு: உக்குவளை செய்தியாளர்)**

## பழைய மாணவர் ஒன்றுகூடல்

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாவட்டம் வலப்பனை கல்வி வலயத்துக்குட்பட்ட மஹாஊவா தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவர்கள் ஒன்றுகூடலும், அணிக்கு ஏழு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் எதிர்வரும் 13, 14 ஆகிய இரு தினங்கள் இடம்பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் எஸ்.செல்வகுமார் மற்றும் பழைய மாணவர்கள் சங்க செயலாளர் ஜோசப் சில்வஸ்டர் ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், ஆரம்ப நிகழ்வாக எதிர்வரும் 13ஆம் திகதி காலை வலப்பனை ஹரிஸ்பெத்த நகரிலிருந்து மஹாஊவா தமிழ் மகா வித்தியாலயம் வரை பழைய மாணவர்கள் வாகனப் பேரணியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கணவனால் தாக்கப்பட்டு மனைவி படுகொலை

### அரநாயக்கவில் சம்பவம்

(கண்டி செய்தியாளர்)

குடும்பத் தகராறு காரணமாக 22 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான இளம் பெண் ஒருவர் அவரது கணவனால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மரணமானதாக அரநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

குடும்பத் தகராறு உச்ச நிலையை அடைந்து, கணவன் தனது மனைவியை கட்டை ஒன்றால் தாக்கியதில் மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இவ்வாறு மரணித்தவர் மில்லங்கொடை என்ற இடத்தைச்சேர்ந்த மொஹொட்டிலாகே குமுதினி தேசானி ரனசிங்க என்பவராவார்.



பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின்படி, சம்பவ இடத்துக்குச் சென்ற போது அவர் மரணமடைந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கணவன் பொலிஸில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக அரநாயக்க பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அரசிடம் நிதி இல்லாவிடின் படிப்படியாக தேர்தல்களை நடத்த முன்வர வேண்டும்

### வடமாகாண சபை அவைத் தலைவர் சிவஞானம் கோரிக்கை

(யாழ். நிருபர்)

அரசாங்கத்திடம் நிதி இல்லாவிடின் கட்டம் கட்டமாக - படிப்படியாக தேர்தல்களை நடத்த முன் வர வேண்டும் - என வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்பன நடத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் கட்டம் கட்டமாக - படிப்படியாக தேர்தல் இடம்பெற்ற வரலாறுகள் உள்ளன. இந்நிலையில், அரசாங்கம் பணம் இல்லை என காலத்தை இழுத்தடிக்காமல் கட்டம் கட்டமாக தேர்தலை நடத்த முன்வர வேண்டும்.

நாடளாவிய ரீதியில் ஆளுநர்களின் அதிகாரம், தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில் வடக்கில் அது அச்சுறுத்தல் பாணியில் நகர்கின்ற நிலையே காணப்படுகின்றது. வடக்கு ஆளுநர் அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டால் நாம் சட்டரீதியாக செயற்படுவோம்.



ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் கூறுவது முழுமையாகத் தவறானது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய இடைக்காலத்துக்கே பதவியில் இருக்க முடியுமே தவிர, முன்னதாகவே தேர்தலை நடத்துவதற்கு உரிமை கிடையாது. இது அரசியலமைப்பில் தெளிவாகக் காணப்படுகிறது.

ஏனைய ஜனாதிபதிக்கு இருக்கின்றதுபோல நான்கு வருடங்களுக்குப் பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் இடைக்கால ஜனாதிபதிக்கு கிடையாது.

தேர்தலை முன்னதாகவே நடத்த வேண்டுமாக இருந்தால் அரசியலமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அதன் பின்னரேயே தேர்தலை நடத்த முடியும் - என்றார்.

## ஈழத்து சீரடியான் அறக்கட்டளையால் யாழ். வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள்



(யாழ். நிருபர்)

ஈழத்து சீரடியான் அறக்கட்டளையினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு ரூபா 6 இலட்சம் பெறுமதியான மருந்துப்பொருட்கள் கடந்த வெள்ளிக்கிழமை (07) வழங்கப்பட்டன.

வைத்தியசாலைகளில் தற்போது நிலவிவரும் அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் முகமாக இந்த மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## மன்னாரில் நபர் ஒருவர் கொடூரக் கொலை

(மன்னார் நகர் நிருபர்)



மன்னார் சாந்திபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் சிலர் இணைந்து கொடூரமாகத் தாக்கியதில் எமில் நகரைச் சேர்ந்த நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், ஐவர் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நீண்டகாலமாக சாந்திபுரம் பகுதியில் இரு குடும்பத்தினருக்கு இடையில் நிலவி வந்த பிரச்சினை பொலிஸ் வரை சென்று சமாதானப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் இரவு குறித்த இரு குடும்பத்தினருக்கு மீண்டும் பிரச்சினை இடம்பெற்ற நிலையில் முரண்பாடு முற்றி பலர் இணைந்து கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதில் எமில் நகர் பகுதியைச் சேர்ந்த 34 வயதான சத்தியா என்ற நபர் மரணமடைந்துள்ளார். தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவர் உட்பட ஐவர் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், மரணம் தொடர்பில் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பல்கலை மாணவர்கள் 17 பேர் போதைப்பொருளுடன் கைது

### பீடாதிபதியின் தலையீட்டால் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் 17 பேரை போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாண பொலிஸார் கைதுசெய்தபோது, பீடாதிபதியின் தலையீட்டினால் மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கொக்குவில் பகுதியிலுள்ள பல்கலைக்கழக மாணவர் விடுதி ஒன்றுக்கும் போதைப்பொருள் விநியோகித்ததாக தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து குறித்த விடுதியை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (09) மாலை பொலிஸார் சுற்றி வளைத்து சோதனையிட்டனர். இதன்போது, மாணவர்கள் விடுதியிலிருந்து போதைப்பொருட்கள் மற்றும் போதை மாத்திரைகள் என்பன மீட்கப்பட்டன.

அதனையடுத்து, அங்கு தங்கியிருந்த 15 சிங்கள மாணவர்கள் மற்றும் 2 தமிழ் மாணவர்களை பொலிஸார் கைதுசெய்தனர்.



மாணவர்களின் கைது தொடர்பில் பீடாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பீடாதிபதி மாணவர்களுக்கு தற்போது பரீட்சை நடைபெற்று வருவதாகவும், கைது நடவடிக்கையால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் எனவும், மாணவர்கள் மத்தியிலான போதைப்பொருள் பாவனை குறித்து பல்கலைக்கழகம் உள்ளக விசாரணைகளை முன்னெடுத்து போதைக்கு அடிமையான மாணவர்களை கண்டறிந்து புனர்வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கும் எனவும் பொலிஸாருக்கு உறுதி அளித்துள்ளார்.

அதனையடுத்து விடுதியில் தங்கியிருந்த மாணவர்களை கடுமையாக எச்சரித்து பொலிஸார் விடுவித்தனர்.

# தாய்மொழி தினத்தை முன்னிட்டு முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள்



(சாவகச்சேரி நிருபர்)

அனைத்துலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு அண்மையில் பசுந்தேசம் அமைப்பினரால் கைதடியிலுள்ள அனைத்து முன்பள்ளிகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

பசுந்தேசம் அமைப்பின் பொருளாளர் இராமலிங்கம் ரூபனின் நிதியுதவியில் மேற்படி உதவித்திட்டம் வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் கூட்டுறவுத்துறையின் 100ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பசுந்தேசம் அமைப்பினரால் முன்பள்ளிச் சிறார்களின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும்முகமாக சிறார்களுக்கு உண்டியல் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். பாரம்பரிய உணவுத்திருவிழா – 2023' எதிர்வரும் 15,16ஆம் திகதிகளில்

(யாழ். நிருபர்)

யாழ். மக்களிடையே அருகிவரும் பாரம்பரிய உணவுப்பழக்கத்தை மேம்படுத்தி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கவும், உணவுத்துறை முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தி, அவற்றுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவும் யாழ். மாவட்ட செயலகம் நடத்தும் "யாழ். பாரம்பரிய உணவுத்திருவிழா - 2023" என்னும் நிகழ்வு சித்திரை மாதம் 15, 16ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் நடைபெறவுள்ளதால் மக்கள் அனைவரும் அந்நிகழ்வில் பங்குபற்றி பாரம்பரிய உணவுவகைகளை ருசித்து, பாரம்பரிய இசையைக் கேட்டு மகிழுமாறு யாழ். மாவட்ட செயலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## ஆனைக்கோட்டை ஆலயத்தில் திருட்டு; சந்தேகத்தில் உதவிப் பூசகர் கைது

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலயத்தில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பித்தளை விளக்குகள் உட்பட்ட பித்தளைப் பொருட்கள் திருட்டு போயுள்ளதாக ஆலயத்தினரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில், மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின்போது ஆலய உதவி பூசகர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் அவர் இரும்பு வியாபாரிக்கு குறித்த பொருட்களை விற்பனை செய்திருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து, யாழ்ப்பாணம் பகுதியினை சேர்ந்த இரும்பு வியாபாரியொருவரை சந்தேகத்தின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் கைதுசெய்ததோடு குறித்த திருட்டுப்பொருட்களையும் கைப்பற்றி சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் 3,820 தொன் யூரியா உரக் கொள்வனவு

## ஐ.நாவின் உணவு, விவசாய அமைப்பினால் கமத்தொழில் அமைச்சிடம் கையளிப்பு





ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) நிதியுதவியின் மூலம், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் (FAO) கொள்வனவு செய்யப்பட்ட 3,820 தொன் யூரியா உரம், இலங்கையின் சிறு வயல்நில விவசாயிகள் மற்றும் நெல் விதை விவசாயிகளுக்கு உடனடியாக விநியோகிக்கும் நோக்கில் நேற்று (10) கமத்தொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொலன்னறுவை, பதுளை, அம்பாறை, மாத்தளை, புத்தளம், குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் அண்மைய பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள 72,200க்கும் மேற்பட்ட வயல்நில விவசாயிகளுக்கு இந்தப் புதிய யூரியா உரம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அடையாளம் காணப்பட்ட நெல் உற்பத்தியாளர்களிடையே ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவ மூலோபாயத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் அதேவேளை, இலங்கையின் விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு ஐ.நாவின் உணவு, விவசாய அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றால் ஆரம்பிக்கப்பட்ட 4 மில்லியன் யூரோ (அண்ணளவாக 1.5 பில்லியன் ரூபா) பெறுமதியான திட்டத்தின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையின் நெற்செய்கைத்துறை புத்துயிர் பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஆதரவைப் பற்றி ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சாய்பி கருத்து வெளியிடுகையில்,

“பாதிக்கப்படக்கூடிய விவசாயிகளுக்கு யூரியா உரங்களை விநியோகிப்பது இலங்கையில் மில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்கும் சமூக-பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்க நாங்கள் மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் ஒன்றாகும். இந்தப் புதிய ஆதரவின் மூலம் உடனடி உணவுப் பற்றாக்குறையைத் தடுக்க முடிவதுடன் எதிர்காலத்தில் மிகவும் நிலையான மற்றும் நெகிழக்கூடிய விவசாயத்துறைக்கு மாறுவதற்கு இதனூடாக பங்களிக்கவும் முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்” - என்றார்.

இந்தத் திட்டத்தின் மூலம், இலக்காக நிர்ணயிக்கப்பட்ட மாவட்டங்களில் 0.5 ஹெக்டேயர் வரை நிலத்தில் பயிரிடும் தகுதியுள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் அடுத்துவரும் அறுவடைப் பருவத்தில் 50 கிலோ யூரியா உரம் வழங்கப்படும். மேலும், இத்திட்டம் உயர்தர நெல் விதைகள் மற்றும் உரத்தின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டை அதிகரிக்க தேவையான தொழில்நுட்பம்/திறன் விருத்தி ஆகியவற்றையும் வழங்கும்.

கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிடுகையில், “ஐரோப்பிய் ஒன்றியம் மற்றும் ஐ.நாவின் உணவு, விவசாய அமைப்பு ஆகியவற்றின் இந்தச் செயற்பாடு, பொருள் ரீதியான உள்ளீடுகளை வழங்குவதைத் தாண்டி, உள்நாட்டு விவசாயத்துறையின் நிலைபேறான தன்மையை உறுதிசெய்வதற்கான நாட்டின் நீண்டகாலத் தேவையை நிவர்த்திசெய்கிறது. இலங்கையை உணவுப் பாதுகாப்புமிக்க நாடாக மாற்றுவதற்கு இது பெரிதும் உதவும் என்பதால் எங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இந்த ஆதரவை நான் பாராட்டுகிறேன்” - என்றார்.

“இலங்கையின் நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், உள்நாட்டு விவசாயத்துறையை புத்துயிர் பெறச் செய்யவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் பெறுமதியான நிதியுதவியின் ஊடாக ஐ.நாவின் உணவு, விவசாய அமைப்பு வழங்கும் பன்முக ஆதரவின் முதல் அங்கமாக இந்த அத்தியாவசிய யூரியா உரம் வழங்குதல் இருக்கும். நாம் கமத்தொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சுடன் நெருக்கமாகப் பணியாற்றி அதன் வெற்றியை உறுதிசெய்யும் அதேவேளை, விரிவாக்க அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியின் மூலம் நாட்டின் விவசாயத்துறையின் நிலைபேறான தன்மையை மேம்படுத்தவும் உதவுவோம்" என இலங்கைக்கான ஐ.நாவின் உணவு, விவசாய அமைப்பின் பிரதிநிதி விம்லேந்திர ஷரன் தெரிவித்தார்.

உரம் மற்றும் முக்கிய உள்ளீடுகளின் பற்றாக்குறை காரணமாக சமீபத்திய அறுவடை காலங்களில் பயிர்ச்செய்கை வெற்றியளிக்காமையானது, சிறு நெல் வயல்நில விவசாயிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதில் பலத்த சவால்களைத் தோற்றுவித்துள்ளன.

இந்த வேலைத்திட்டம், தற்போதைய தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் உரப் பாவனைத் திறனை மேம்படுத்துவதற்கும், இலங்கையில் விதை நெல் உற்பத்தி முறையை வலுப்படுத்துவதற்கும் விஞ்ஞான விவசாய முறைகளைக் கடைப்பிடிக்கவும், பொருள் மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகள் மூலம் சிறு நெல் வயல்நில விவசாயிகளை ஊக்குவிக்க முயல்கிறது. அரச விதைப் பண்ணைகளுக்கு நவீன, அதிநவீன விதை பதப்படுத்துதல் மற்றும் உலர்த்தும் இயந்திரங்களை வழங்குவதன் மூலம் அவற்றை வலுப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## மனைவியின் தாக்குதலில் கணவன் உயிரிழப்பு

புலஸ்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, புலஸ்திகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் கொலைச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது. அந்த பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மனைவி தனது கணவரை கத்தியால் தாக்கியமையினால் இந்த உயிரிழப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக புலஸ்திபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த நபரை புலஸ்திகம வைத்தியசாலையில் சேர்த்தபோது உயிரிழந்திருந்ததாக 119 அவசர அழைப்பு இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய புலஸ்திபுர பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 29 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளதுடன், உயிரிழந்த நபரும் அவரின் மனைவியும் சம்பவ தினத்தன்று தொடர்ச்சியாக வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மேலும், ஒருவரையொருவர் தாக்கி வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், குறித்த பெண் உயிரிழந்த நபரின் பின்புறமாக கத்தியால் தாக்கியுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான உயிரிழந்த நபரின் மனைவி படுகாயங்களுக்குள்ளான நிலையில் புலஸ்திகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் சந்தேகநபரான குறித்த பெண் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கடன் தொகையை மீள செலுத்த பிரான்ஸ் நிறுவனத்தின் உதவியை நாடும் அரசாங்கம்

## போக்குவரத்து அமைச்சர் பந்துல தகவல்

(அந்துவன்)



''எமது வரி சுதந்திரம் உள்ளிட்ட தவறான முடிவுளே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணமாகும். இதற்கு முன்னர் இருந்த அரசாங்கம் பெற்றுக்கொண்ட கடன் தொகையை, அடுத்து வரும் அரசாங்கம் செலுத்த வேண்டும். இவ்வாறானதொரு சூழ்நிலையில், உலகத்திற்கு முன் சண்டியர்களாக செயற்பட முடியாது. ஆகவே, கடனை மீள செலுத்த பிரான்ஸ் நிறுவனத்தின் உதவியை கேட்டுள்ளோம்'' என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் கடன் உதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (09) போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே போக்குவரத்து அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தலையீடு எதவுமின்றி போக்குவரத்து கூட்டுத்தானத்திற்கு தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலைமையை மாற்ற என்னால் முடிந்தது.

இதுவரை ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் வருமானத்திற்கு அதிகமாகவே செலவு செய்துள்ளனர். எரிபொருள் மின்சாரம் என்பவற்றிலும் இந்த நிலைமை உள்ளது. ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளினால் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தது.

அதனைத்தொடர்ந்து கொவிட் -19 தொற்று பரவலடைய ஆரம்பித்தது. அதேபோன்று நாம் எடுத்த வரி சுதந்திரம் உள்ளிட்ட தவறான முடிவுகளும் இதற்குக் காரணங்களாகும். முன்னாள் அரசாங்கம் எடுத்த கடனை அடுத்துவரும் அரசாங்கம் செலுத்த வேண்டும். உலகத்திற்கு முன் சண்டியர்களாக செயற்பட முடியாது. ஆகவே, கடனை மீள செலுத்த பிரான்ஸ் நிறுவனத்தின் உதவியை கேட்டுள்ளோம். 2025ஆம் ஆண்டாகும்போது போக்குவரத்து சபையின் பணத்தை வெளி செல்ல விடாது பாதுகாத்தால் அதனை மீள வழங்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.






கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நோன்பு துறக்கும் விசேட இப்தார் நிகழ்வு கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர் சலீமின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கண்டி மாவட்ட பிரதேச செயலாளர் சந்தன தென்னகோன், சிறப்பு அதிதியாக கண்டி பிரதி பொலிஸ் மா அதிபர் மஹிந்த திசாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படங்கள் - இக்பால் அலி)

# ‘விழுமியம்’ சஞ்சிகையின் வெளியீட்டு விழா





ஆறு தசாப்தங்களுக்கு மேலான இதழியல் வரலாற்றைக்கொண்ட இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முத்திங்கள் வெளியீடாக ‘விழுமியம்’ காலாண்டு சஞ்சிகையின் உத்தியோகபூர்வ வெளியீட்டு விழா கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜமாஅத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.உஸைர் இஸ்லாஹியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டு விசேட உரையாற்றினார்.

சஞ்சிகையின் ஆய்வுரையை ஒளி, ஒலிபரப்பாளரும் மூத்த ஊடகவியலாளருமான கவிஞர் அஷ்ரப் ஷிஹாப்தீன் நிகழ்த்தினார்.

ஜமாஅத்தின் 65 வருட இதழியல் வரலாறு தொடர்பான விவரணப்படமும் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டது.

வரவேற்புரை தாருல் ஈமான் ட்ரஸ்ட் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ரிம்ஸான் ரபீக், நன்றியுரை ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி பாரிஸ் ஸாலி ஆகியோர் நிகழ்த்தினர்.

# ஊடக சுதந்திரத்திற்கு களங்கம் ஏற்படுத்துவது தவறு!

## யாழ். பத்திரிகை நிறுவனமொன்றில் இடம்பெற்ற அத்துமீறல் குறித்து சிறீதரன் எம்.பி. கருத்து

ஊடகம் ஒரு செய்தியை பிரசுரித்ததன் பின்னர், அந்தச் செய்தி பிழையென்று குறிப்பிட்டு நிறுவனத்திற்குள் சென்று அடாவடியாக செயற்பட்டு ஊடக சுதந்திரத்திற்கு களங்கம் ஏற்படுத்துவது தவறான விடயமாகுமென்றும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அனைத்து சமயங்களும் புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை நிறுவனம் ஒன்றினுள் நேற்று முன்தினம் கும்பல் ஒன்று அத்துமீறி உள்நுழைந்து அமைதியின்மையை ஏற்படுத்தியமை குறித்து அவர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அச்சுவேலி பகுதியில் போதகர் ஒருவர் பொதுமக்களை தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான செய்தி ஊடகமொன்றில் பிரசுரமாகி இருந்தது.

அந்தச் செய்தியை காரணங்காட்டி, குறித்த ஊடக நிறுவனத்துக்குள் உள்நுழைந்த கும்பல் இவ்வாறு அநாகரிகமாக செயற்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்.

அண்மைக்காலமாக தமிழர் தாயகத்தில் மதவாதம் தலைதூக்கியுள்ளது. நினைத்த இடத்தில் புத்தர் சிலை வைப்பதும், ஏனைய மதங்களது சிலைகளை வைப்பதுமென நிலைமை மோசமாகியுள்ளது. இது ஓர் ஆரோக்கியமான விடயமல்ல.

தமிழர்கள் நாங்கள் மதத்தால் முரண்பட்டு சண்டையிடாமல், ஒற்றுமையாக இருந்து எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

ஊடகம் ஒரு செய்தியை பிரசுரித்தால் அந்த செய்தி பிழையானது என சுட்டிக்காட்டி அந்த நிறுவனத்திற்குள் சென்று அடாவடியாக செயற்பட்டு ஊடக சுதந்திரத்திற்கு களங்கம் ஏற்படுத்தக்கூடாது. எனவே, நாங்கள் அனைவரும் தமிழர் என்ற ரீதியில் ஒற்றுமையாக இணைந்து பயணிக்க வேண்டும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# வாகன விபத்தில் கிரிக்கெட் வீரர் பலி: எண்மர் படுகாயம்

## கவனமின்மையினால் மாத்தளையில் ஏற்பட்ட துயரம்!





(கண்டி நிருபர்)

மாத்தளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில், புனித தோமையர் கல்லூரியைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை, பலாபத்வல பிரதேசத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மாத்தளை புனித தோமையர் கல்லூரி உயர்தர வகுப்பில் கல்வி கற்றுவந்த மாணவர்கள் மாத்தளை, கவுடுபெலெல்லவிலுள்ள விடுதியொன்றில் வருடாந்த சந்திப்பில் கலந்துகொண்டதன் பின்னர் மாத்தளை நோக்கி பயணித்துள்ளனர். இதன்போது கடந்த 08ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. கவனமற்ற முறையில் வாகனத்தை செலுத்தியமையின் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சாரதியின் கட்டுப்பாட்டை மீறிய வாகனம், பாதை ஓரமாக இருந்த பெரிய மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், இந்த விபத்தில் வாகனத்துக்குள் இருந்த மேலும் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய துஷ்மந்த சித்துல் விஜேசேகர என்ற இளைஞர் பாடசாலை கிரிக்கெட் அணியின் தலைவராக செயற்பட்டு வந்துள்ளதுடன், தேசிய 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியின் அங்கத்தவராக பெயரிடப்பட்ட கிரிக்கெட் வீரராவார்.

விபத்தில் காயமடைந்தவர்கள் கண்டி மற்றும் மாத்தளை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மரணமடைந்த மாணவன் புனித தோமையர் கல்லூரி சிரேஷ்ட மாணவத் தலைவர் என தெரியவருகிறது. விபத்து தொடர்பாக மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





இப்பாகமுவ வீர கேர்ணல் நியோமால் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சமூகச் செயற்பாட்டாளர் தொழிலதிபர் தேசமானிய கே.எம்.எஸ்.எம்.றாசிக் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் அதிபர் மற்றும் இப்பாகமுவ கல்வி வலயக் கல்வி அதிகாரிகள் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் - இக்பால் அலி)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (10.04.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 206.3360 | 219.8193 |
| கனேடியன் டொலர் | 229.3607 | 244.1800 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.6023 | 48.2612 |
| யூரோ | 338.4791 | 358.6128 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4801 |
| சிங்கப்பூர் டொலர் | 232.9340 | 247.4046 |
| ஸ்ரேலிங் பவுன் | 385.3604 | 407.8118 |
| சுவிஸ் பிராங்க் | 342.0962 | 364.6345 |
| ஐ.அ. டொலர் | 311.6379 | 327.7229 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848.6814 |
| குவைட் | குவைட் தினார் | 1,043.9271 |
| ஓமான் | ஓமான் றியால் | 831.1555 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.1745 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.2866 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.1223 |

# பொன்மலைக்குடா காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, புல்மோட்டை பொன்மலைக்குடா காணி அபகரிப்புக்கு எதிராக குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்னால் சிவில் சமூக அமைப்பினால் திங்கட்கிழமை (10) ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "எங்கள் பூர்வீகக் காணிகளை அபகரிக்க வேண்டாம், பிழையான நில அளவை படங்களை இரத்துச் செய், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் குச்சவெளி பிரதேச சபை ஆகியவற்றினால் முறையற்ற ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமல் காணி அபகரிப்புக்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிக அனுமதியை இரத்துச் செய்'' போன்ற பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# புனித பத்து சஹாபாக்கள் நினைவு தின மணாகிப் மஜ்லிஸ் கொடியேற்ற நிகழ்வு



(பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெறும் (ஹிஜ்ரி 1444 றமழான் 17 - 2023) புனித பத்து சஹாபாக்கள் நினைவு தின மணாகிப் மஜ்லிஸ் கொடியேற்ற நிகழ்வும் வருடாந்த இப்தார் நிகழ்வும் தாறுஸ்ஸபா அமைய பிரதானி மௌலவி உஸ்தாத் ஏ.ஆர்.சபா முஹம்மத் தலைமையில் தாறுஸ்ஸபா அமைய தலைமையகத்தில் இடம்பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை(09) மாலை இடம்பெற்ற இந்நிகழ்வில், புனித பத்து சஹாபாக்கள் நினைவு தின மணாகிப் மஜ்லிசினை தொடர்ந்து கொடியேற்றப்பட்டதுடன், வருடாந்த இப்தார் நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வில் உலமாக்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் நிர்வாகிகள், கலை, அரசியல், இலக்கிய, ஊடகத்துறை சார்ந்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பள்ளிவாசலுக்கு காணி நன்கொடை



(பாலமுனை செய்தியாளர்)

பாலமுனை ஹைமா பள்ளிவாசலுக்கு தர்ம நன்கொடை(காணி) வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (08) பள்ளிவாசல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாலமுனை ஹைமா பள்ளிவாசல் தலைவர் இஸ்ஸதீன் ஏ.ஸிறாஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் உப தலைவரும் ஸஹ்வா இஸ்லாமிய்யா அரபுக் கலாசாலையின் ஸ்தாபக அதிபருமான அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாசிம் ஸூரி மதனி, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், பள்ளிவாசல் உப தலைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.ஜே.எம்.றிஸ்வான், செயலாளர் எஸ்.ஹைதர் உட்பட நிர்வாகிகள், மஹல்லா வாசிகள் மற்றும் காணியை வழங்கிய சகோதரரின் மைத்துனர் எம்.பீ.ஏ.கபூர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பாலமுனை கிராமத்தில் குறித்த பள்ளிவாசல் மஹல்லா பிரிவில் வசித்துவரும் மீராலெவ்வை றசீனா எனும் சகோதரியே தனது சொந்தக் குடியிருப்பு நிலத்தின் ஒரு பகுதியினை பள்ளிவாசலுக்கு வக்பு செய்து தர்ம நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttthamilan@gmail.com

# 'சமுர்த்தி அபிமானி' வர்த்தகக் கண்காட்சி





(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுவரும் 'சமுர்த்தி அபிமானி' வர்த்தகக் கண்காட்சியும், விற்பனையும் திங்கட்கிழமை (10) அட்டாளைச்சேனை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முசாபிர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கண்காட்சி மற்றும் விற்பனைக்கூடத்தை திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழீல், கணக்காளர் ஏ.எல்.றிபாஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அப்துல் மஜீத், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸீஸ் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பல்லாண்டு காலமாக சமுர்த்தி பயன்களைப் பெற்று பல வகையான சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றவர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும், எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள பண்டிகைப் புத்தாண்டு மற்றும் நோன்புப் பெருநாளைக் கொண்டாவுள்ள மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் 'சமுர்த்தி அபிமானி' வர்த்தகக் கண்காட்சியும், விற்பனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழில் அமைச்சரின் அறிவுறுத்தலில் மீனவர் வாழ்வாதாரத் திட்டம் ஆரம்பம்

(திகாமடுல்ல, வெல்லாவெளி செய்தியாளர்கள்)



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் நீரியல் வள மூலங்கள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கமைய காரைதீவு பிரதேச மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களுக்கான பூர்வாங்க முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த நாட்களில் அம்பாறை மாவட்டம் முழுவதும் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நிறைவாக சனிக்கிழமை இரவு காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தை தரிசித்தார். இதன்போது சர்வமத பீடத்தின் ஸ்தாபகரும் தலைவருமான ஜீவாகரன் சுவாமிகள் ஆசி வழங்கினார்.

மீனவர்களுக்கான வீட்டுத் திட்டம், வலைகள் வழங்கும் திட்டம் உள்ளிட்ட வேலைத்திட்டங்களில் காரைதீவு பிரதேச மீனவர்களை உள்ளீர்க்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைதீவு பிரதேச அமைப்பாளர் த. தர்மேந்திராவுக்கு அறிவுறுத்தினார்.

மக்கள் நலன் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்துக்கும் சர்வமத பீடம் ஒத்துழைப்பு வழங்கும் என்று ஜீவாகரன் சுவாமிகள் தெரிவித்தார். அமைச்சரின் அறிவுறுத்தல், ஆலோசனையின் பிரகாரம் பயனாளிகளை அடையாளம் கண்டு முன்னிலைப்படுத்துகின்ற பதிவு நடவடிக்கைகளை த. தர்மேந்திரா மறுநாள்முதல் ஆரம்பித்தார்.

காரைதீவிலுள்ள கடற்றொழிலாளர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுநல செயற்பாட்டாளர்கள் விசேட உத்தேச வேலைத்திட்டங்களுக்கான முன்மொழிவுகளை தயார் செய்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஓய்வு நிலை பிரதி அதிபரும், காரைதீவு விஷ்ணு ஆலயத்தின் முன்னாள் தர்மகர்த்தாவுமான எஸ். தில்லையம்பலம் இவற்றுக்கான யோசனைகளை முன்வைத்துள்ளார்.



போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை(10) நடைபெற்ற 'சமுர்த்தி அபிமானி' புத்தாண்டு சந்தையின்போது பயனாளி ஒருவருக்கு பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் தொகையை வழங்கினார். (பாண்டிருப்பு செய்தியாளர்)

# ஆலையடிவேம்பில் விற்பனைச் சந்தை





(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் 'சமுர்த்தி அபிமானி' வர்த்தகக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் பிரதேச செயலக முன்வளாகத்தில் திங்கட்கிழமை (10) ஆரம்பிக்கப்பட்டது.

தலைமையக சமுர்த்தி முகாமையாளர் என்.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதேச செயலாளர் வி.பபாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர், திட்டமிடல் பணிப்பாளர் ஹிசைன்டீன், நிர்வாக உத்தியோகத்தர் சோபிதா, முகாமைத்துவப் பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன், திட்டமிடல் முகாமையாளர் சத்தியப்பிரியன், தெற்கு வங்கி சமுர்த்தி முகாமையாளர் கவிதா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலாளர் சம்பிரதாயபூர்வமாக விற்பனைச் சந்தையை திறந்து வைத்தார். இதன்போது சமுர்த்திப் பயனாளிகளால் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், விற்பனையும் செய்யப்பட்டது. இதேநேரம் சமுர்த்தி வங்கியினால் நடமாடும் வங்கிச்சேவை இடம்பெற்றது. இங்கு வழங்கப்படும் பணத்தைக்கொண்டு மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

# மாணவர்கள் கௌரவிப்பு





(பாண்டிருப்பு செய்தியாளர்)

கல்முனை வலயக்கல்விப்பணிமனைக்குட்பட்ட பெரியநீலாவணைக் கிராமத்தில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலய அதிபர் எஸ்.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

பெரியநீலாவணை கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் பாராட்டு விழாவில், பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் நிர்வாகப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக வலயக் கல்விப் பணிமனையின் திட்டமிடல் பிரிவுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வருணீயா உட்பட தமிழ்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கே.சாந்தகுமார், முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர். இங்கு பெரியநீலாவணைக் கிராமத்திற்கு பெருமை சேர்த்த 21 மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஊடாக புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் வருடாந்தம் சுவாமி விவேகானந்தரின் ஜனன தினத்தினை முன்னிட்டு பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (09) மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் சார்பாக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.திவாகரன், மட்/கிரான் குளம் விநாயகர் வித்தியாலய அதிபர் மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், சேவையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் சமுர்த்தி கிளை ஏற்பாடு செய்த சந்தை நிகழ்வு பிரதேச செயலக வளாகத்தில் திங்கட்கிழமை (10) இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த சந்தையானது தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இதில் தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர உட்பட சமுர்த்தி கிளை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)



மருதமுனையில் உள்ள சமூக நிறுவனங்களுக்கு இலவச மெகா (LED) மின்குமிழ்கள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (08) நடைபெற்றது. இலங்கை பைத்துல் ஹெல்ப் அமைப்பின் அனுசரணையில் மருதமுனை அந்-நஹ்லா அரபுக் கல்லூரி, மஸ்ஜிதுல் நூறானியா, மருதமுனை கியூமன் லீன்க் மாற்றுத்திறனாளிகளுக்கான வளப்படுத்தல் மத்திய நிலையம் போன்ற சமூக நிறுவனங்களுக்கு இலவச மின்குமிழ்கள் பைத்துல் ஹெல்ப் அமைப்பின் பிரதானி ரைஸூல் ஹக்கீம் தலைமையில் வழங்கப்பட்டது.

(பெரியநீலாவணை செய்தியாளர்)



நாவிதன்வெளி பிரதேச செயலகம் மற்றும் சமுர்த்தித் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடுசெய்த 'சமுர்த்தி அபிமானி - 2023' விற்பனைச் சந்தையும் கண்காட்சியும் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது. பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உணவு உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனையில் ஈடுபட்ட அதேவேளை, பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பொருட்கொள்வனவில் ஈடுபட்டனர். (பெரியநீலாவணை செய்தியாளர்)

# இ.போ.சபை பஸ் மோதி ஒருவர் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கந்தளாய் பிரதான வீதி சர்தாபுர பகுதியில் துவிச்சக்கரவண்டியுடன் இ.போ. பஸ் மோதியதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இவ்விபத்து திங்கட்கிழமை(10) காலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து பயணித்துக் கொண்டிருந்த குறித்த பஸ் மஞ்சள்நிற கோட்டை கடக்க முற்பட்ட துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தில் திருகோணமலை சர்தாபுரம், ஆறாம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே.ஏ.வசந்த (36 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நபர் மஞ்சள்நிற கோட்டினால் வீதியைக் கடக்க முற்பட்டபோது விபத்து இடம்பெற்றதில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இந்நிலையில், சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிய வருகிறது. உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதியை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# திருக்கோவிலில் கைக்குண்டு மீட்பு

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள உமரி பிரதேசத்திலுள்ள தனியார் காணி ஒன்றில் நிலத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றை ஞாயிற்றுக்கிழமை(09) மீட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றுக்குச் சொந்தமான விடுதிக்கு முன்னாலுள்ள காணியில் சம்பவதினம் காலை விடுதி காவலாளி காணியில் வளர்ந்துள்ள புற்களை வெட்டி துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது நிலத்தில் புதையுண்டிருந்த கைக்குண்டு ஒன்றை கண்டு பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசேட அதிரடிப்படை குண்டு செயலிழக்கும் பிரிவினரை வரவழைத்து குண்டை செயலிழக்கச் செய்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டு கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)



மோட்டார்சைக்கிளில் நாட்டு கஞ்சாவை கடத்திய சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கமைய அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர் ஞாயிற்றுக்கிழமை (09) மாலை மேற்கொண்ட நடவடிக்கையில் இக்கைது இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது'செய்யப்பட்ட சந்தேக நபர் மண்டூர்ப் பகுதியை சேர்ந்த 59 வயது நபராவார். மேற்குறித்த நாட்டு கஞ்சா போதைப்பொருளை கடத்திச் செல்வதற்காக தயாராக இருந்தவேளை அம்பாறை மாவட்ட சவளக்கடை பொலிஸ் பிரிவிலுள்ள வேப்பயடி சந்தியில் வைத்து சந்தேக நபர் மோட்டார்சைக்கிளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து தொலைபேசி ஒன்று, 1 கிலோ 50 கிராம் பொதிசெய்யப்பட்ட நாட்டு கஞ்சா மற்றும் ஒருதொகைப் பணம், மோட்டார்சைக்கிள் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய, பொலிஸ் குழுவினர் மற்றும் அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவினர் இணைந்தே இந்நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். பின்னர் கைதுசெய்யப்பட்ட நபர் சான்றுப் பொருட்களுடன் சவளக்கடை பொலிஸாரிடம் மேலதிக நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த குறித்த சந்தேக நபரை விசேட அதிரடிப்படையினர் மாறுவேடத்தில் சென்று நீண்ட போராட்டத்தின் பின்னர் கைதுசெய்துள்ளனர்.

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் அதிபயங்கரமானது!

## கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் மஹ்தி

(கிண்ணியா செய்தியாளர்)

பாராளுமன்றத்தில் நீதியமைச்சரால் சமர்ப்பிக் கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அதி பயங்கரமானது என கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலன்களுக்காக உருவாக்கப்பட வேண்டிய சட்டங்கள் சுயநல அரசியல் நோக்கங்களுக்காகவும் சிறுபான்மை மக்களை நசுக்குவதற்காகவுமே பயன்படுத்தப்படுகின்றன. கடந்த காலங்களில் அரங்கேறிய உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தொடர்ந்து நடந்தேறிய சிறுபான்மை முஸ்லிம்களின் கைதுகள், மத்ரசாக்கள், பள்ளிகள் தாக்கப்பட்டமை என்பன அதற்கு சிறந்த சான்றுகளாகும்.அந்த அடிப்படையிலேயே தற்போது இந்த பயங்கரமான பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குமுன்னர் பயங்கரவாதம் என்ற சொல்லை முறையாக வரைவிலக்கணப்படுத்த வேண்டும், அச்சட்டமூலத்தை மூன்று மொழிகளிலும் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும், நாட்டை அழிக்கும் போதைப் பொருள் வியாபாரம், அரச சொத்துகளின் மீதான பாரிய கொள்ளைகள், என்பவற்றையும் பயங்கரவாத செயற்பாடுகளாக வரையறை செய்ய வேண்டும்,

பயங்கவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் 48 மணித்தியாலயங்களுக்குள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட முடியாத விடத்து அக் கைதுக்கு காரணமானவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்போன்ற பல கோரிக்கைகளை நீதியமைச்சரிடம் முன்வைக்கப்பட வேண்டும் என்று அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கிண்ணியா ஆயுர்வேத வைத்தியசாலை குறித்து இம்ரான் எம்.பி. கலந்துரையாடல்

(கிண்ணியா, கந்தளாய் செய்தியாளர்கள்)



கிண்ணியா பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், சுதேச வைத்திய திணைக்கள ஆணையாளர் திருமதி எஸ்.ஸ்ரீதர் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

சமீபத்தில் சுகாதார அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது நடுத்தீவு வைத்தியசாலையின் ஆளணி பற்றாக்குறை தொடர்பாக பரிசீலிக்கப்பட்டது. இவ்வைத்தியசாலை வார்ட்களை உள்ளடக்கிய மாவட்ட வைத்தியசாலையாக இருந்தபோதிலும் அதற்குத் தேவையான வைத்தியர்கள் மற்றும் ஏனைய ஆளணியினர் இல்லை. இதனால் நோயாளிகள் முழுமையான சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக இம்ரான் எம்.பி. இதன்போது சுட்டிக் காட்டினார்.

இவ்வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலை என திறந்துவைக்கப்பட்டாலும் இதற்குரிய ஆளணி சாதாரண வைத்தியசாலைக்குரியதாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆளணி அங்கீகாரமின்றியே இது மாவட்ட வைத்தியசாலையாகத் திறக்கப்பட்டுள்ளது. இதனாலேயே வைத்தியசாலைக்குரிய ஆளணியை வழங்க முடியாதுள்ளதாகவும் இது குறித்து ஆளணி ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார்.

கொழும்பு ஆளணி ஆணைக்குழுவோடு பேசி புதிய ஆளணி அங்கீகாரத்தை விரைவுபடுத்த தான் நடவடிக்கை எடுப்பதாகவும், அதற்குத் தேவையான தகவல்களைத் தருமாறும் கேட்டுக்கொண்டார். நடுத்தீவு மற்றும் சூரங்கல் வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு இருப்பதை இதன்போது சுதேச வைத்திய திணைக்கள ஆணையாளரின் கவனத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கொண்டுவந்தார். அதனைத் தான் கவனத்தில் எடுத்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

# பாலம்போட்டாறு பகுதியில் துப்பாக்கிச்சூடு: ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, பாலம்போட்டாறு காட்டுப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபரொருவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு காட்டுப் பகுதிக்குள் தேன் எடுப்பதற்காக ஐந்து பேர் சென்றபோது அதில் ஒருவருக்கு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை (07) பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்த துப்பாக்கிச்சூட்டில் தம்பலகாமம், பொற்கேணி பகுதியைச் சேர்ந்த யூ.எல். எம்.பரீட் (48 வயது) என்பவர் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த நபரின் தோள் பகுதியில் பாரிய காயம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, 1990 அம்பியூலன்ஸ் மூலம் அழைத்து வரப்பட்டதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் எதுவித தகவலும் கிடைக்காத பட்சத்தில், தம்பலகாமம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், காயமடைந்த குறித்த நபரை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# வீடுகளை உடைத்து பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டு

## காத்தான்குடியில் சம்பவம் - ஒருவர் கைது

(மட்டக்களப்பு செய்தியாளர்)

இரு வீடுகளை உடைத்து பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிய சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர். இச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி மற்றும் நதியா கடற்கரை பிரதேசம் ஆகிய இடங்களில் சனிக்கிழமை (08) இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.றஹீம் தெரிவித்தார்.

மீன்பிடி இலாகா வீதியிலுள்ள வீடொன்றின் கதவை உடைத்து 4 பவுண் தங்க நகை, 5 இலட்ச ரூபா பணம் என்பவற்றையும் நதியா கடற்கரைப் பகுதியிலுள்ள தோட்டமொன்றிலுள்ள வீட்டுக் கூரையை உடைத்து உள்ளே இறங்கி மின்விசிறி, கெமராக்கள், தண்ணீர் ஹீற்றர், வானொலிப் பெட்டி உட்பட பல பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர், ஒருவரைக் கைதுசெய்துள்ளதுடன், மேலும் இருவரைத் தேடிவருகின்றனர். கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து மின்விசிறி மற்றும் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் உட்பட திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# விலைகள் குறைக்கப்பட்ட பொருட்களை கடைகளில் பெற்றுக்கொள்வதில் ஏமாற்றம்

(பாண்டிருப்பு செய்தியாளர்)

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு பொதுமக்கள் பொருட்களை கொள்வனவுசெய்வதில் ஆர்வங்காட்டி வருகின்றனர். அரசாங்கத்தினால் சீனி, பருப்பு, கோதுமை மா உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்கள் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் சந்தைகளில் குறைக்கப்பட்ட பொருட்களை கொள்வனவுசெய்வதில் பொதுமக்கள் மிகுந்த ஏமாற்றங்களுக்குள்ளாகி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடைகளுக்குச் செல்லும் நுகர்வோர் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாக வியாபாரிகளிடம் கேட்கின்றபோது தம்மிடம் பழைய விலையில் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களே கையிருப்பில் இருப்பதாகவும் புதிய பொருட்கள் இன்னும் கொள்முதல் செய்யப்படவில்லை எனவும் பதில் வழங்கப்படுகின்றது.

இதனால் சில இடங்களில் நுகர்வோருக்கும் வியாபாரிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கங்கள் ஏற்படுவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. பொருட்களின் விலைகள் கூடியுள்ளதாக அறிவிக்கப்பட்ட அன்றே பொருட்களை கூடிய விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரிகள் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றபோது ஏன் குறைப்பதில்லை எனவும் நுகர்வோர் கேள்வி எழுப்புகின்றனர்.

சித்திரைப் புதுவருட கொண்டாட்டத்திற்காக மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மக்கள் ஆர்வமுடன் பொருட் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். இங்குள்ள பலசரக்குக் கடைகளில் பொருட்களின் விலைப்பட்டியல் கூட காட்சிப்படுத்தப்படாதுள்ளது.

நுகர்வோர் அதிகாரசபையினர் பண்டிகைக் காலத்தில் குறைக்கப்பட்ட பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சாய்ந்தமருது ஆயுர்வேத வைத்தியசாலை வசதிகள் தொடர்பில் நடவடிக்கை



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் காணப்படுகின்ற ஆயுர்வேத வைத்தியசாலைகளின் பங்களிப்பை உச்சளவில் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ்பயன்படுத்தி வருகின்றார். ஆயுர்வேத வைத்தியசாலைகளின் பணிகள் மற்றும் மருந்து விநியோகத்தில் முன்னரை விட ஒரு புதிய பரிணாமம் ஏற்பட்டு தற்போது ஆய்வுகள், உற்பத்திகள் என்று பல நடவடிக்கைகள் பணிப்பாளரினால் முடக்கிவிடப்பட்டிருக்கின்றன.

இதன் ஓர் அங்கமாக, கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சாய்ந்தமருது ஆயுர்வேத வைத்தியசாலைக்கு காணிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வைத்தியசாலையின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அதிகமான நோயாளிகளை கவர்ந்தெடுப்பதற்குமான முதற்கட்ட நடவடிக்கையாக திட்டமிடல் கலந்துரையாடல் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.நபீல், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம். மாஹிர், ஆயுர்வேத வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. ஓய்வூதியக்காரர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்த வேண்டாம்

## அரச அதிபர் வேண்டுகோள்



(புளியந்தீவு செய்தியாளர்)

மட்டு. மாவட்ட ஓய்வூதியக்காரர்களை பதுளையில் இயங்கும் ஓய்வூதிய பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கோரவேண்டாமென மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா ஓய்வூதியத் திணைக்களத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓய்வூதியக்காரர்களை அவர்களது கோவைகளை சீர்படுத்துவதற்காக பதுளையிலுள்ள ஓய்வூதிய பணிமனைக்கு அழைப்பதை ஓய்வூதியத் திணைக்களம் வழக்கத்தில் கொண்டிருக்கிறது. இச்செயற்பாடு ஓய்வூதியக்காரர்களுக்கு பயணச் செலவோடு சிரமம் நிறைந்ததாகவிருப்பதாக அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இதற்கு நடவடிக்கை எடுக்குமுகமாகவே ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளருக்கு இவ்வாறானதொரு வேண்டுகோளை விடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும், மக்களின் காலடிக்கு நிர்வாகத்தை கொண்டுசெல்ல வேண்டுமே தவிர, அரச அதிகாரிகள் மக்களை தங்களிடம் அழைப்பது தவறானது. அது சிறந்த நிர்வாகமாகாது. ஓய்வூதியக்காரர்கள் பலரை பதுளை காரியாலயத்திற்கு அழைத்து அவர்களுக்கு பணவிரயத்தையும் சிரமத்தையும் ஏற்படுத்துவது சிறந்த நிர்வாகமாகாது. இதற்குப் பதிலாக ஓரிரு அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வருகைதந்து ஓய்வூதியக்காரர்களை அழைத்து கோவைகளை சீர்செய்யலாம். இதனால் திணைக்களத்தின் பணி சிரமமின்றி நிறைவேறிவிடுவதோடு, ஓய்வூதியக்காரர்களுக்கும் சிரமமோ பணச் செலவோ ஏற்படமாட்டாது - என்றார்.

# கணேசபுர பிரதேச குளத்திலிருந்து வயோதிபப்பெண் சடலமாக மீட்பு

## மண்டூரில் சம்பவம்

(மண்டூர் செய்தியாளர்)

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசபுர பிரதேச குளம் ஒன்றிலிருந்து வயோதிபப் பெண் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை(09) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணேசபுரம் மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த 98 வயதுடைய வேலாச்சி கன்னிப்பிள்ளை என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தனது பேத்தியின் பராமரிப்பில் இருந்துவந்த குறித்த வயோதிபப்பெண் இதற்கு முன்னர் பல தடவைகள் அருகிலுள்ள குளத்தில் தற்கொலைக்கு முயற்சித்திருந்த நிலையில், காப்பாற்றப்பட்டிருந்ததாகவும் சம்பவ தினத்தன்று வீட்டில் இருந்தவர் காணாமல்போயிருந்த நிலையில் அருகிலுள்ள குளத்துப்பகுதியில் உறவினர்கள் தேடிச்சென்றபோது நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ. ரஞ்சித்குமாரின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டதுடன் விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளித்தார்.

மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீடு வாடகைக்கு தேடும் பாணியில் தங்கச்சங்கிலி கொள்ளை

## மூவர் தப்பியோட்டம்

(கனகராசா சரவணன்)

வீடு வாடகைக்கு தேவை என வீடு ஒன்றுக்குள் உள்நுழைந்த 3 பேர் கொண்ட இளைஞர்கள் அங்கு தனிமையில் இருந்த பெண்ணை தாக்கிவிட்டு அவரிடமிருந்த தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி, ஒந்தாச்சி பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த பெண் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதினம் பிற்பகல் 2 மணிக்கு வீட்டிலிருந்து கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்பிய குறித்த பெண், வீட்டில் தனியாக இருந்துள்ளார். அங்கு 3 இளைஞர்கள் சென்று வீடு ஒன்று வாடகைக்கு தேவை எனக் கேட்டுள்ளனர்.

மேலும் சிறிதுநேரம் கழித்து, திடீரென அந்தப்பெண் மீது தாக்கிவிட்டு அவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலி மற்றும் கையில் இருந்த காப்பு என்பவற்றை கொள்ளையடித்து தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில், தாக்குதலில் படுகாயமடைந்த பெண்ணை அயலவர்கள் மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# போடியார் புலம்பல்!



**அப்பா, சித்தாப்பா, குஞ்சப்பா, பெரியப்பா எல்லாப்பேரும் குற்றமற்றவர்கள் எண்டு நிருபணமாகித்தாம் எண்டு வாய் கூசாம பச்சப்பொய்ய ராஜபக்ஷ கொம்பனிட கடக்குட்டி சின்னப்பொடியன் நாமல் சொல்லுறான் எலுவா.? அடேய் தமிழ்மக்கள இனப்படுகொல செய்த உங்கட பரம்பரை குற்றம் நிருபிக்கத்தாண்டா சர்வதேச நீதிகேட்டு தமிழர்கள் போராடுறாங்க.. மனிசனால கொப்பனுக்கு தண்டன கிடைக்காட்டியும் கடவுளால கெதியா கிடைக்கும் எண்டத மட்டும் இப்ப பாரு ஒண்ட சித்தப்பன் கோட்டாவப்போல தனிச்சு விடப்படுவயள் சரியா?**

உலக செய்திகள்

## இலங்கை உட்பட 155 நாடுகளின் நதிகளிலிருந்து பெறப்பட்ட புனிதநீர்:

# அயோத்தி ராமபிரானுக்கு ஏப்.23இல் ஜல அபிஷேகம்



இலங்கை, பாகிஸ்தான் உட்பட 155 நாடுகளின் நதிகளிலிருந்து பெறப்பட்ட புனித நீர்கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி அயோத்தி ராமபிரான் சிலைக்கு ஜல அபிஷேகம் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் உட்பட பலர் பங்கேற்கவுள்ளனர்.

பாகிஸ்தானின் ரவி நதியிலிருந்து கடைசியாக புனித நீர் பெறப்பட்டநிலையில் இந்துக்கள் மூலமாக அது டுபாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து டில்லிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கை உள்ளிட்ட 155 நாடுகளின் நதிகளிலிருந்தும் புனித நீர் கலசத்தில் சேமிக்கப்பட்டு அயோத்திக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

# ரஷ்யாவால் நாடு கடத்தப்பட்ட உக்ரைன் குழந்தைகள் தாயகம் திரும்பியுள்ளனர்



ரஷ்யாவால் நாடு கடத்தப்பட்ட உக்ரைன் குழந்தைகள் நாடு திரும்பியுள்ளனர். போரில் ரஷ்யாவால் சட்டவிரோதமாக நாடுகடத்தப்பட்ட உக்ரைன் குழந்தைகள் 31 பேர் பல மாதங்களுக்குப் பின்னர் தாய்நாட்டுக்குத் திரும்பியுள்ளர். சனிக்கிழமையன்று அவர்கள் நாடு திரும்பியதாக சேவ் உக்ரைன் தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. இவர்கள் கெர்சோன் மற்றும் கார்கீவ் பகுதிகளிலிருந்து கடத்தப்பட்டதாகவும், 5 மாதங்களில் 5 முறை அவர்களது இருப்பிடம் மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைனின் கூற்றுப்படி 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் ரஷ்யாவுக்கு நாடு கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் குழந்தைகள் சட்டவிரோதமாக நாடு கடத்தப்பட்டதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த மாதம் ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு பிடியாணை பிறப்பிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரிப்பு; கட்டுப்பாடுகள் தீவிரம்

## பொது இடங்களில் 'மாஸ்க்' அணிவதை கட்டாயப்படுத்தும் மாநில அரசுகள்



இந்தியாவில் மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்துவரும் நிலையில், அங்கு கொரோனா கட்டுப்பாடுகளை மீண்டும் தீவிரமாக அமுல்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஒருநாளில் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஹரியானா, கேரளா, உத்தரப்பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களில் கொரோனா கட்டுப்பாடுகளை மீண்டும் தீவிரமாக அமுல்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி, டில்லியிலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிரிழப்பு எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. இதையடுத்து, மாநில அரசுகள் உச்சகட்ட விழிப்புணர்வுடன் செயற்படுமாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. மருத்துவ வசதிகளை தயார்நிலையில் வைத்துக்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

விமானநிலையங்களில் சர்வதேச பயணிகளிடம் கொரோனா பரிசோதனையை அதிகரிப்பது, பூஸ்டர் டோஸ் தடுப்பூசியை விரைந்து செலுத்துவது உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டுதல்களையும் மத்திய அரசு வழங்கியுள்ளது.

மேலும், ஹரியானாவில் கொரோனா பரவல் அதிகரித்துள்ளதால், பொது இடங்களில் முகக்கவசம் (மாஸ்க்) அணிவதை அம்மாநில அரசு கட்டாயமாக்கியுள்ளது.

கொரோனா பரவலின் தீவிரம் காரணமாக கர்ப்பிணிகள், வயதானவர்கள், பல்வேறு நோய்களால் நீண்டகாலம் பாதிக்கப்பட்டவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று கேரள அரசு உத்தரவிட்டுள்ளது. ஒட்சிசன் போதுமான அளவில் இருப்பதை உறுதிசெய்யுமாறும் வைத்தியசாலைகளுக்கு கேரள அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதேபோல, உத்தரப்பிரதேசம், புதுச்சேரி, டில்லி உள்ளிட்ட மாநில அரசுகள் சார்பிலும் பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

# கர்ப்பகால கொரோனா தொற்று: குழந்தைகளின் மூளை பாதிப்பு



கர்ப்பகாலத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த இரு பெண்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு மூளை பாதிப்பு ஏற்பட்டதாக அமெரிக்காவின் மியாமி பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த இரு கர்ப்பிணிகள் ஈன்றெடுத்த குழந்தைகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்படவில்லை.

கொரோனா வைரஸை எதிர்கொள்ளும் வகையில், குழந்தைகளின் இரத்தத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரித்துள்ளது. இருப்பினும், அந்த இரண்டு குழந்தைகளுக்கு தொற்று பாதிப்பு எப்படி ஏற்பட்டது என்று ஆய்வாளர்களும், மருத்துவர்களும் ஆய்வுசெய்தனர்.

அப்போது தாயையும், சேயையும் இணைக்கும் தொப்புள்கொடி மூலம் தொற்று பரவியமை தெரியவந்தது. உயிரிழந்த குழந்தையின் உடலை உடற்கூராய்வு செய்ததில், அதன் மூளையில் கொரோனா வைரஸின் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

## சட்டவிரோத கடற் பயணம்:

# படகு கவிழ்ந்து 27 அகதிகள் பலி: 17 பேர் மீட்பு; 20பேர் மாயம்



டுனிசியாவிலிருந்து சட்டவிரோதமாக இத்தாலி நோக்கி அகதிகள் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் உயிரிந்துள்ளதுடன், 17 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் 20 பேர் காணாமல்போயுள்ள நிலையில் அவர்களை தேடும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போர் காரணமாக அங்கு கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கிருந்து வாழ்வாதாரம் தேடி பலர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குப் படையெடுத்து வருகின்றனர்.

அவ்வாறு செல்லும்போது பெரும்பாலும் அவர்கள் சட்டவிரோத பயணம் மேற்கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதன்படி டுனிசியாவிலிருந்து இத்தாலிக்கு 2 படகுகள் மூலம் 50இற்கும் மேற்பட்டோர் சென்ற நிலையில், திடீரென அதிக காற்று வீசியதால் அந்தப் படகுகள் கடலில் கவிழ்ந்தன.

இதுகுறித்து தகவலறிந்த கடலோர காவல் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். எனினும், இந்த விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர். நீரில் தத்தளித்தப்படி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 17 பேரை மீட்புக் குழுவினர் மீட்டனர். இந்த விபத்தில் 20 பேர் காணாமல்போயுள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியாததால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. எனினும், மாயமானவர்களைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# வெண்கலம் வென்ற தனுஷ்க சந்தருவன்



அமெரிக்காவின் புளோரிடா, அன்சின் விளையாட்டுத் தொகுதி அரங்கில் நடைபெற்ற மிராமர் அழைப்பு மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான நீளம் பாய்தலில் இலங்கை வீரர் தனுஷ்க சந்தருவன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

அப்போட்டியில் தனுஷ்க சந்தருவன் தனது 6ஆவதும் கடைசியுமான முயற்சில் 7.92 மீற்றர் தூரம் பாய்ந்ததன் மூலம் வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்துகொண்டார். அவர் தனது 6 முயற்சிகளிலும் 7 மீற்றருக்குமேல் பாய்ந்தமை விசேட அம்சமாகும். அவரது பெறுதிகள் 7.13 மீற்றர், 7.74 மீற்றர், 7.43 மீற்றர், 7.83 மீற்றர், 7.79 மீற்றர், 7.92 மீற்றர் என அமைந்திருந்தது.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் வில்லியம்ஸ் 8.25 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கதை சுவீகரித்தார். ஜப்பான் வீரர் நட்சுகி யமாகாவா (8.00 மீற்றர்) வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.





இலங்கை கிரிக்கெட் அணியுடன் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் அயர்லாந்து அணி நேற்று முன்தினம் இரவு நாட்டை வந்தடைந்தது.

# ஐந்து சிக்ஸர்களை விளாசி அதிர்ச்சியளித்த ரிங்கு



குஜராத் டைட்டன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 204 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து 205 ஓட்டங்கள் இலக்குடன் கொல்கத்தா அணி விளையாடியது. கடைசி ஓவரில் 29 ஓட்டங்கள் கொல்கத்தா அணிக்குத் தேவைப்பட்டது.

குஜராத் அணியின் யாஷ் தயாள் வீசினார். அப்போது ரிங்கு சிங் தொடர்ந்து 5 சிக்ஸர்களை பறக்க விட்டு அணியை வெற்றிபெறச் செய்தார். ரிங்கு சிங் 21 பந்துகளில் 48 ஓட்டங்கள் குவித்தார். கிரிக்கெட் ரசிகர்களால் எதிர்பாராத வெற்றியாகவே இது அமைந்தது.

TATA IPL

## இன்றைய போட்டி

போட்டி இல. - 16

மும்பை எதிர் டெல்லி

நேரம் - இரவு 7.30

இடம் - டெல்லி

# மட்டக்களப்பு ஊறணி சரஸ்வதி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி!





(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்தின் 2023ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி கடந்த திங்கட்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு, ஊறணி சரஸ்வதி வித்தியாலய அதிபர் எஸ். கணேசரத்தினம் தலைமையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சுபாகரனும் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார உட்பட விசேட அதிதிகளும் கலந்துகொண்டனர்.

இப்போட்டிகளில் இடம்பெற்ற அணிநடை, கராத்தே தற்காப்பு, உடற்பயிற்சிக் கண்காட்சி, பேண்ட் வாத்தியம் ஆகியன அனைவரதும் கவனத்தை ஈர்த்ததுடன், இவ்விளையாட்டுப் போட்டியில் மஞ்சள் நிற காவேரி இல்லம் 439 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், நீல நிற கங்கை இல்லம் 351 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், பச்சை நிற ஜமுனை இல்லம் 350 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

# ஒலிம்பிக்கில் ரஷ்யப் போட்டியாளர்கள் அனுமதிக்கப்பட்டால் போட்டிகளை பகிஷ்கரிக்கப் போகிறோம் - இரட்டைச் சகோதரிகள் தெரிவிப்பு



பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்யப் போட்டியாளர்கள் அனுமதிக்கப்பட்டால் அப்போட்டிகளை தாம் பகிஷ்கரிக்கப்போவதாக உக்ரைனிய நீச்சல் போட்டியாளர்கள் சிலர் எச்சரித்துள்ளனர். உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் பின்னர் ரஷ்யாவுக்கும் அதன் ஆதரவு நாடான பெலாரஸுக்கும் பல சர்வதேச விளையாட்டுச் சம்மேளனங்கள் தடை விதித்துள்ளன.

இந்நிலையில், ரஷ்யப் போட்டியாளர்கள் அனுமதிக்கப்பட்டால் பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளை தாம் பகிஷ்கரிக்கப்போவதாக உக்ரைனின் இசையொருங்கு நீச்சல் நட்சத்திரங்களான மரினா அலேக்சீவா மற்றும் விலாடிஸ்லாவா அலேக்சீவா ஆகியோர் சூளுரைத்துள்ளனர்.

இரட்டைச் சகோதரிகளான இவ்விருவரும் 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வெண்கலப் பதக்கம் வென்றதுடன், கடந்த வருடம் உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டிகளில் இரு தங்கப் பதக்கங்களையும் வென்றனர். எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கங்களை இவர்கள் குறிவைத்துள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7